
பொம்மை



"எங்கள் மோகனச் சிரிப்புக்குக் காரணம்தானே....?"

—ஜூபிடர் ராணியில் பாலசந்தரும், பானுமதியும்



உங்களுக்கு
நான்கு நண்பர்கள் இல்லையா?

'பொன்னி' உங்களுக்கு இலவசமாக
வர இதோ அரிய சந்தர்ப்பம்!

1. பெயர் ______________________________
விலாசம் ______________________________

2. பெயர் ______________________________
விலாசம் ______________________________

3. பெயர் ______________________________
விலாசம் ______________________________

4. பெயர் ______________________________
விலாசம் ______________________________

5. பெயர் ______________________________
விலாசம் ______________________________

மேற்குறிப்பிட்ட முதல் நான்கு விலாசங்களுக்கு 'பொன்னி' ஒரு ஆண்டுக்கு/ஆறு மாதத்திற்கு அனுப்பி வைப்பதற்காகச் சந்தாத் தொகை ரூ. 24 அல்லது 12 இன்று M. O. செய்திருக்கிறேன். 5-வது இட்த்தில் குறிப்பிட்டுள்ள என் விலாசத்திற்கும் ஒரு ஆண்டுக்கு/ஆறுமாதத்திற்கு இலவசமாகப் 'பொன்னி' அனுப்பவேண்டுகிறேன்.

ஊர்.....................

தேதி...................

சந்தா

ஆறு மாதம் ரூ. 3—0—0
ஒரு ஆண்டு ரூ. 6—0—0

____
கையெழுத்து

....

இந்தப் பாரத்தைப் பூர்த்திசெய்து இன்றே அனுப்புங்கள்; இச் சலுகை தீருவதற்குள் உங்கள் பெயர்களைப் 'பொன்னி' சந்தாப் பதிவில் இடம்பெறச் செய்யுங்கள்.

புதிய வெளியீடு

மலர்த்தோட்டம்

தோழர் A. V. P. ஆசைத்தம்பி

திராவிட இயக்கத் தோழர்கள் ஒவ்வொருவர் கையிலும் தவறாது இருக்கவேண்டிய அருமையான நூல். அழகிய முகப்புடன் திகழ்வது.

விலை 8 அணா

விற்பனையாகிறது!

'செச்சில்' ஆசிரியர் காத்துக்குடி தோழர் இரா. சு. தங்கப்பழம். அவர்களின் அரிய நூல்கள்.

தங்கையின் காதலன்	0—8—0
பதவி	0—8—0
திண்டுக்கல்லில் தங்கப்பழம்	0—4—0

இதர நூல்கள்

மாஸ்கோவில் சர்ச்சில்	0—6—0
ஒழிக பெண்கள்	0—6—0
அமெரிக்காவில் அண்ணா	0—5—0
சீரழிவுப் பாதையில் ஜெயப்பிரகாஷ்	0—3—0
முன்னேற்றக் கவிதைகள்	0—2—0
ஒட்டு வேட்டை	0—4—0

விற்பனையாளர்க்கு எங்கள் செலவில் 25% கழிவுடன் அனுப்பப்படும். விவரமான புத்தகப் பட்டியலுக்கு எழுதுங்கள்.

செல்வம் பதிப்பகம்
வெண்கலக்கடைத் தெரு
மதுரை

புதிய புத்தகங்கள்!

புராண மதங்கள் (C. N. அண்ணாதுரை)	1—0—0
தேன் துளிகள் ,,	1—0—0
தங்கத்தின் காதலன்	0—3—0
கொலைக் களம் (மு. கருணாநிதி)	0—8—0
துடிக்கும் இளமை ,,	0—6—0
தூக்கு மேடை ,,	1—8—0
கோவையில் கருணாநிதி ,,	0—8—0
நானா (எமிலி ஜோலா)	1—0—0
உலகைத் திருத்திய உத்தமர்கள் (வடுருவி)	1—0—0
வானம்பாடி (தணலன்)	1—8—0
எழிலரசி கிளியோபாட்ரா (குமரி மன்னன்)	1—0—0
வழுக்கி விழுந்தவள் (விருதை ந. இராமசாமி)	1—0—0
துரோகி (தில்லை-வில்லாளன்)	2—0—0
என் வாழ்வு (ரத்தினம்)	0–10—0

வியாபாரிகட்கு : 30% கழிவு. செலவு தனி.

விற்பனை நிலையம் :

M. S. ராமுலு கம்பெனி
286, சைனாபஜார் — சென்னை-1

இலங்கை ஏஜெண்ட்

கலைமகள் கம்பெனி
செட்டியார் தெரு — கொழும்பு-11

NA-6

தலைப்புக்குப் பரிசு!

பண்டுதொட்டு இன்றளவும் மலர் கற்பனையின் ஊற்றாக விளங்கிவருகிறது. கலைஞர்கள் மலர்க் கூட்டத்தைச் சுற்றி வலம் வருவது இயற்கை. மலரை உவமையாகக் கையாளாத எழுத்துச் சிற்பி யாரும் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை; எந்தப் பெரிய கவியும் மலரை விலக்கிவிட்டுத் தன் கற்பனைகளை விரித்ததில்லை. இந்நிலையில் 'பொன்னி' மேலட்டையில் தன் இதழ் விரித்த 'பொன் அலரி' தமிழகத்தில் காணும் கற்பனை வளத்தை நம் கண்முன்னே விரித்து வைத்திருக்கிறது. போட்டிக்கு வந்திருக்கும் தலைப்புகளை எண்ண முடியவில்லை. தனியே ஒரு பெரிய சாக்குப் பையில் வைத்திருக்க வேண்டிய அளவுக்குத் தலைப்புகளை அனுப்பித் திணறவைத்திருக்கிறார்கள் நம் கற்பனைச் சிற்பிகள்! கலந்துகொண்டிருப்பவர்களில் ஆண்களைவிடப் பெண்கள் மிகுதி என்ற செய்தி ஆண்களுக்குமட்டும் தெரிந்திருக்க வேண்டியதாகும். இந்தச்செய்தியினால் தலைப்புகளின் 'சிறப்பு நிலை'யை முடிவுசெய்யும் பொறுப்பு மேலும் கடுமையாக்கப்பட்டிருக்கிறதென்பதை நாம் கூறவேண்டியதில்லை. எனினும் நண்பர்களின் ஆர்வம் நம்மை இம்முயற்சியில் ஊக்கி வருகிறது; தலைப்புப் போட்டியும் தொடர்கிறது.

சங்கரின் நிழற்படத்தை இந்த இதழ் மேலட்டையில் காணும் நண்பர்களுக்குப் பாரதியாரின் 'பிள்ளைக்கனியமுதே — கண்ணம்மா, பேசும் பொற்சித்திரமே' என்ற வரிகள் நினைவுக்கு வருவது இயற்கைதானே! அந்நினைவைத் தொடர்ந்து அப்படத்திற்குத் தக்க தலைப்பினைத் தேர்ந்தெடுக்கும் பணி உங்களைத் தொட்டுமல்லவா? ஒரு அஞ்சல் அட்டையில் உங்கள் பெயர் முகவரியுடன் உங்கள் கற்பனையுள்ளம் வடிக்கும் தலைப்பை 20-3-52க்குள் எழுதியனுப்புங்கள். ஒருவர் ஒரு தலைப்புக்கு மேல் அனுப்பக்கூடாது. சிறந்த தலைப்புக்கு ரூ. 5-பரிசு அளிக்கப்படும். சென்ற இதழில் வெளிவந்த தலைப்புப் போட்டி முடிவு விவரம் மற்றொரு பக்கத்தில் இடம் பெற்றிருக்கிறது.

பொன்னி


பொருளடக்கம்

மலர் 6 | மார்ச் 10, 1952 | இதழ் 3

திருவள்ளுவர் ஆண்டு 1983
மாசித்திங்கள் 27-ம் நாள்

*

பொன்னி சந்தா விவரம்; உள்நாடு, இலங்கை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6—0—0; ஆறுமாதம் ரூ. 3—0—0. வெளிநாடு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6-12-0; ஆறுமாதம் ரூ. 3-6-0. இலங்கைக்கு வி.பி.பி. உண்டு.



தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைமையைக் காமராஜ் ராஜிநாமாச் செய்
தால் காங்கிரசுக்குப் புதுப்பலம் சேருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மந்திரிசபை அமைப்பு
மக்கள் கடமை

சென்னையில் எந்த மந்திரிசபை அமையுமென்பது இன்னும் தீராத புதிராகவே இருக்கிறது! இந்தியாவிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் காங்கிரஸ் அரசோச்சப்போகிறது—மத்திய சர்க்காரிலும் நேரு நிகரற்ற பெரும்பான்மை பலத்தோடு மந்திரிசபை அமைக்கவிருக்கிறார்! சென்னைமட்டும் இந்நிலையில் தனிவழியை மேற்கொண்டிருக்கிறது! அவ்வழி உருவாகி உரம்பெறுவது சென்னை ராஜ்ய மக்கள் காட்டும் உற்சாகத்தைப் பொறுத்திருக்கிறதென்று கூறவேண்டியதில்லை. தேர்தலில் 'காங்கிரஸ் ஆட்சிமீது நம்பிக்கையில்லை' என்று தெளிவாக விளக்கும் வகையில் ஓட்டுப் போட்டதோடு சென்னை மக்களின் கடமை தீர்ந்துவிடவில்லை—அவர்கள் எண்ணம் முற்றும் நிறைவேற—மக்கள் ஆட்சி மலர இன்னும் அவர்கள் ஆற்றவேண்டிய கடமை நிறைய இருக்கிறது!

இப்பொழுது சென்னையில் முதல்தரமான 'அரசியல் நெருக்கடி' ஏற்பட்டிருக்கிறதென்று கூறுவது மிகையல்ல. இந்த அரசியல் நெருக்கடியைத் தீர்த்துவைக்கவேண்டிய பொறுப்பு பொதுமக்களைச் சார்ந்திருக்கிறது; மேலும் அது தீரும் வழியை முடிவு செய்யும் அதிகாரமும் பொதுமக்களிடமே இருக்கிறது. நாம் இப்படிக் கூறும்போது பலருக்கு ஆச்சரியம் ஏற்படலாம். சட்டமன்றம் வந்துள்ளவர்கள் மக்களின் பிரதிநிதிகளே என்பதும், மக்கள் விரும்புவதை நிறைவேற்றவே அவர்கள் சட்டமன்றம் வந்துள்ளார்கள் என்பதும் மறுக்கமுடியாத உண்மைகள். ஆனால் பிரதிநிதிகள் இந்த உண்மைகளை மறந்து நடக்கலாமென்றும், அவர்களை வரப்போகும் ஐந்து ஆண்டுகளுக்கு மக்களின் எந்த அதிகாரமும் கட்டுப்படுத்த முடியாதென்றும் கூறமுடியும். எனினும் நடந்துமுடிந்த தேர்தல் இந்த ராஜ்யத்தில் ஏற்படுத்தியிருக்கிற சூழ்நிலை, சட்டமன்ற உறுப்பினர்களின் தான்தோன்றிப் போக்குக்கு இடமளிக்கத் தக்கதாக இல்லை. எந்தக் கட்சிக்கும்

இறுதியான பெரும்பான்மை பலம் இல்லாத நிலையில், எதேச்சாதிகாரப் போக்கு வளர முடியாது. எனவேதான் மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தங்கள் விருப்பப்படி இயக்கும் அதிகாரம் படைத்திருக்கிறார்கள் என்று கூறுகிறோம்.

மக்கள் கையில் நிரந்தரமாகத் தங்கியிருக்கும் இந்த அதிகாரம் கவனமாகவும் விரைவாகவும் செயற்படவேண்டிய கட்டம் இப்பொழுது வந்திருக்கிறது. ஏற்பட்டிருக்கிற அரசியல் நெருக்கடி தீரவேண்டுமென்பதோடு மக்கள் விருப்பத்துக்கு ஆதரவான சூழ்நிலையும் உருவாக வேண்டும். இல்லாவிட்டால் முற்போக்காளர்கள் வெற்றி பெற்றும் நெருக்கடிகாரணமாகப் பிற்போக்காளர்கள் பதவிக்கு வந்துவிடக்கூடிய ஆபத்து காத்திருக்கிறது. இந்த ஆபத்தை உணர்ந்து திராவிடமுன்னேற்றக் கழகம், மக்கள் கடமையை வலியுறுத்த முன்வந்திருக்கிறது. தன் ஆதரவு பெற்றுச் சட்டமன்ற உறுப்பினர்களாக வெற்றி பெற்றவர்களைப் பாராட்டக் கூடிய சென்னைக் கூட்டத்தில் அண்ணா அறிவித்த கருத்துக்கள் தக்க காலத்தில் காங்கிரசுக்குத் தந்த எச்சரிக்கையாகும். காங்கிரஸல்லாத ஐக்கிய ஜனநாயக முன்னணி உரிய பலத்தோடு உருவாவதற்கு நல்லசூழ்நிலையை இந்தக் கூட்டம் ஏற்படுத்தித் தந்திருக்கிறது. அதேபோன்று மக்கள் மன்றத்திலே செல்வாக்குப் பெற்றுள்ள எல்லாக் கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் தங்கள் முடிவுகளை உடனடியாக மக்களிடம் தெரிவித்து விடவேண்டும். அத்துடன் மக்கள் விருப்பத்தைத் தெளிவுபடுத்தும் வகையில் நாடெங்கும் பொதுக்கூட்டங்களும் கிளர்ச்சிகளும் ஊர்வலங்களும் நிகழ வேண்டும். காங்கிரஸல்லாத மக்கள் ஆட்சி வேண்டுமென்ற பேரொலி எங்கும் கிளர்ந்தெழ வேண்டியது மிகமிக இன்றியமையாதது. அந்தப் பெரு முழக்கம்தான் காங்கிரஸல்லாத சட்டமன்ற உறுப்பினர்களிடையே ஒற்றுமையை உண்டாக்க முடியும்; சில்லறைச் சலுகைகளுக்காகப் பிளவுபட்டு நிற்பவர்களை ஒன்றுசேர்க்க முடியும்; சபலம் காரணமாகக் காங்கிரஸை நோக்கிநிற்கும் சுயேச்சையாளர்களை ஐக்கிய ஜனநாயக முன்னணிப்பக்கம் திரும்பும்படி செய்யமுடியும்; நடுநிலைமைச் சங்கூதும் கட்சிகளின் தவறான போக்கைத் திருத்த முடியும்; சென்னை ராஜ்யத்தில் மக்கள் ஆட்சியை உருவாக்க உதவ முடியும்; மீண்டும் பதவிக்கு வரக் காங்கிரஸ் செய்யும் சூழ்ச்சிகளை முறியடிக்க முடியும்.

தேர்தலில் மக்கள் விருப்பம் பிரதிபலித்ததுபோல் மந்திரிசபை யமைப்பிலும் மக்கள் விருப்பம் பிரதிபலிக்கவேண்டும்; அவ்வகையில் மக்களை இயக்குவது தலைவர்களின் கடமையாகும்.

வெறும்  கலாட்டா!

சீர்திருத்தம்

சென்னை நகர டிராம்வண்டிகளைச் சீர்திருத்தம் செய்யப் போவதாகச் செய்தி வந்திருக்கிறது. சென்னையிலுள்ள டிராம் வண்டிகளைப்பற்றி அறியாதவர்கள் யாரும் இருக்கமுடியாது; அவ்வளவு பிரசித்தமானவை அவை. 'மாதம் போம் காதவழி' என்று பாடல்களில் வர்ணிக்கப்படும் 'விகடராமன்' குதிரையைப்பற்றி நாம் படித்திருக்கிறோம்! ஆனால் 'நகரும் ஆமை'க்குச் சரியான 'இயந்திர மாதிரி'யாக வரும் டிராம்வண்டியைப் பார்க்கும் வாய்ப்பையே பெற்றிருக்கிறோம். ஏன், நம்மில் பலர் அதில் அமர்ந்து 'உல்லாசமாக'ப் பிரயாணம் செய்துமிருக்கிறோம்.


ஒரு கட்டுரையில் படித்ததாக நினைவு. அந்தக் கட்டுரையை எழுதியவர் விமானங்களில் பிரயாணம் செய்வதைக் 'குறைத்து மதிப்பிட்டு' எழுதியிருந்தார். ரயிலில் பிரயாணம் செய்தால் வழிநெடுக என்னென்ன அதிசயங்களைப்பார்க்க முடியும்! எத்தனை எத்தனை கற்பனைகளில் மூழ்கமுடியும்! விமானப் பயணத்தில் இத்தகைய வசதி இல்லையே என்பதுதான் அவர் குறை! ரயில்வண்டியைக் குப்பையில் தள்ளுங்கள். டிராம் வண்டியை நோக்க, இந்த வசதியை அளிப்பதில், 'அது' (ரயில் வண்டிதான்) மிகமிகச் சாமான்யமானதாகிவிடுகிறது. 'பார் பார் பட்டணம்பார்' என்று சொன்னவன் டிராம்வண்டியில்பிரயாணம் செய்யும் போதுதான் சொல்லியிருக்கவேண்டும்; 'பட்டணத்தைப் பார்த்தவனும்' அதே டிராம்வண்டியில்தான் பிரயாணம் செய்திருக்கவேண்டும். இது டிராம்வண்டியின் வேகத்தைப்பற்றிய விமரிசனம் மட்டுமே. அது போடும்சத்தமோ சென்னை நகரின் 'இனிய ஒலிகளில்'ஒரு பகுதி! இசைக்குக் கட்டுண்ட தமிழ்ப் பெருமக்கள், டிராம் வண்டியின் இன்னொலிக்கும் கட்டுப்படுவதில் வியப்பொன்றுமில்லை.



அணுகுண்டுப்பரீட்சை

பொறாமை சாதாரணமான குணமில்லை. அது 'மிகமிக'ப் பெரியவர்களுக்கே வாய்க்கும். இந்தப் பூவுலகத்தில் தலைவர்கள், நிபுணர்கள், அதிகாரிகள், அமைச்சர்கள், ஜனாதிபதிகள்,

பிரதம மந்திரிகள், யாருக்குமே இந்த 'அபூர்வ வஸ்து' அமைவதில்லை. அதனால் தான் உலகத்தில் எந்த நேரத்திலும் 'போர் மூளலாம்' என்ற பயமிருக்கிறது. அந்தப் பயத்தில் தான் அமெரிக்காவும் ரஷ்யாவும் நடத்திப் பார்த்த அணுகுண்டுப் பரீட்சையைப் பிரிட்டனும் நடத்த முன்வந்திருக்கிறது! இந்தப் பரீட்சை, போட்டா போட்டி எல்லாவற்றுக்கும் காரணம், போதுமான 'பொறுமை' உலகத்தில் இல்லாததுதான்! உலகத்திலேயே பஞ்சமாகிவிட்ட இந்தப் 'பொறுமை' என்னும் அருங்குணம் ஒரு நாட்டில் ஒருவர் இருவரிடம் மட்டுமல்ல, எல்லோரிடமுமிருக்கிறது என்றால் ஆச்சரியப்படத் தான் வேண்டும். அந்தத் திருநாடுதான் நம் தமிழ்ப் பொன்னாடு! இந் நன்னாட்டில்தான் 'பொறுமை' அளவுகடந்து இருக்கிறது; கணக்கு வழக்கின்றி மலை மலையாகக் குவிந்துகிடக்கிறது! நெல் இருந்த களஞ்சியங்களிலெல்லாம் இந்தப் பொறுமை புகுந்து கொண்டுவிட்டது—நீர் நிறைந்திருந்த ஏரிகளிலெல்லாம், குளம் குட்டைகளிலெல்லாம், ஆறுகண்மாய்களிலெல்லாம், இப்போது தண்ணீருக்குப் பதில் 'பொறுமை' வெட்டவெளியாய்க் காட்சியளிக்கிறது. பொறுமைத் தாய் இவ்வாறு தமிழ்நாட்டின் அகண்ட வெளியெங்கும் திருநடனம் பயில்கின்றாள்.



...புது மணப்பெண் போல...

ரேஷன் கடையில் தரும் ஆறு அவுன்ஸ் அரிசி—அதிலும் கல், மண், புழு, பூச்சிபாதி! இதனை வாய்மூடி மௌனிகளாய் வாங்கிச்சென்று உண்டு உறங்கி உயர்வுகாணும் மக்களைப் பொறுமை தவழும் இந்த நாட்டில் தவிர வேறெந்த நாட்டில் காண முடியும்! 'தீராத தலைவலி' தரும் சத்தமும் காதில் மகிழ்ச்சித் தேனாக விழ, பிரயாணிகள் இருபுறம் திராட்சைப் பழக்கொத்தைப் போல் தொங்கும் உன்னத காட்சி கண்களில் அழகோவியமெனப்பட, ஒரு தலைநகரின் அழகிய தெருக்களில் புதுமணப்பெண் நடையொத்த நடைபயிலும் 'டிராம்' வண்டியை பொருட்காட்சியில் வைக்கவேண்டிய அளவுக்குப் பழையதாகிவிட்ட ஒரு வாகனத்தைப் பொறுமைக்குப் பேர்போன இந்தநாட்டைத் தவிர வேறு எந்தநாட்டில் காண முடியும்! அந்தப்பொறுமைக்கும் எல்லை வந்துவிட்டது போலும்! டிராம்வண்டிச் சீர்திருத்தம் தொடங்கியிருக்கிறது!

காங்கிரஸ் சீர்திருத்தம், நவீன சீர்திருத்தங்களில் குறிப்பிட வேண்டிய மற்றொன்றாகும். பிரதமர் நேரு தம் தேர்தல் பிரசாரத்தின்போது கொடுத்த வாக்குறுதிகளில் 'காங்கிரஸைச் சீர்திருத்துவேன்' என்பதும் ஒன்று. தேர்தல் முடிந்துவிட்டதால் அந்தச் சீர்திருத்தம் ஆரம்பமாயிருக்கிறதாகத் தெரிகிறது. 'தேசங்கள் தோறும் பாஷைகள் வேறு' என்று பழமொழியுண்டு. அதுபோல இந்தச் சீர்திருத்தமும் இடத்திற்குத் தகுந்தபடி, ஆளுக்குத் தகுந்தபடி நடக்க ஆரம்பித்திருக்கிறது. தமிழ்நாட்டுச் சந்தானம், மாயவரம் பார்லிமெண்டுத் தொகுதியில் தேர்தலில் நின்று தோற்றுப் போகவே, விந்தியப் பிரதேசத்துக்கு 'யோகம்' அடித்திருக்கிறது. சீர்திருத்த வீரர் நேரு, மந்திரி சந்தானத்தைக் கவர்னர் சந்தானமாக ஆக்கியிருக்கிறார்; இது முதல் சீர்திருத்தம்! பம்பாயில் காங்கிரஸ் கட்சி 'அமோக' வெற்றியடைந்தும், அங்கே கட்சித் தலைவராகவும், உள்நாட்டு மந்திரியாகவும் விளங்கிய 'மொரார்ஜி தேசாய்' ஓட்டுகளை ஒரு தடவை எண்ணுவதில் தோல்வியடைந்ததோடு இரண்டு தடவை எண்ணியும் தோல்வியடைந்துவிட்டாரல்லவா? அவரைச் சீர்திருத்த முனைந்தது காங்கிரஸ் தலைமை! 'அசெம்பிளித் தேர்தலில் தோற்றால் என்ன, மேல்சபையில் மெம்பராக்கிவிட்டால் போகிறது!' என்று அவருக்கு அபயம் கொடுத்ததோடு, 'தோற்றாலும் ஜெயித்தாலும் அவர்தான் உங்கட்குத் தலைவர்' என்று பம்பாய்க் காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர்களுக்கும் சீர்திருத்தத்தை வாரிவழங்கியிருக்கிறது! இது சீர்திருத்தத்தின் இரண்டாவது படி! நமது ராசபாளையம் கனம் ராஜாவுக்கும் இந்தச் சீர்திருத்த யோகம் அடிக்கலாமென்று பேசிக்கொள்ளப்படுகிறது—எப்படியோ காங்கிரஸ் சீர்திருத்தம் தொடங்கிவிட்டது; காங்கிரசுக்கு ஓட்டுப்போட்ட 'ஸ்ரீமான்கள்' நேரு வாக்குறுதி நிறைவேறுவதைக் கண்டு திருப்தியடையலாம்.



ரவிக்கை அணிவது....

செட்டிமார் நாட்டில் இருபது ஆண்டுகளுக்கு முன்பு சீர்திருத்த வாடை அதிகமாக அடித்தது தமிழ்நாட்டினருக்கு தெரிந்த சேதிதான்! அங்கே சீர்திருத்த இயக்கம் வேரூன்றக் காரணமாயிருந்

பரிசு பெற்ற தலைப்பு

25–2–52 மேலட்டையில் வெளிவந்த நிழற்படம் குறித்து எங்களுக்குக் கிடைத்த தலைப்புகளில் கீழ்க்கண்ட தலைப்பு ரூ. 5–பரிசு பெறுகிறது.

தேன்சிட்டுக்களின்
மதுக்கோப்பை–
வண்டுகளின்
பட்டுந்தொட்டில்

பரிசு பெற்றவர்:
அமரஜீவன்
C/O எஸ். எ. வகாப்.
ஆரணி அஞ்சல், பொன்னேரி தாலூக்கா

மற்றும் பாராட்டுக்குரிய தலைப்புகளைக் கீழே தந்திருக்கிறோம்.

தலைப்பு:
சோலைப் பெண்ணின் சொகுசுத் தொங்கட்டம்!
என். ஜே. மேரி
ஆரணி

தலைப்பு:
அசையும் கொம்பில் அழகின் சிரிப்பு!
பெ. குருவன்
உடுமலைப்பேட்டை

தலைப்பு:
இலை மேகத்தினூடே தோட்டத்து நிலவுகள்!
சி. காந்திராசன்
விருதுநகர்

தலைப்பு:
உதட்டில் சிரிப்பு-உள்ளத்தில் தேன்
சிசி
அருண்டேல்பேட் அஞ்சல், குண்டூர்

தவர்களில் முக்கியமானவர் 'குமரன்' ஆசிரியர் சொ. முருகப்பா அவர்கள். சீர்திருத்தப் புயல் பாவிய அந்த நாட்களில் தமக்கு வாய்த்த சுவைமிக்க அனுபவங்களை முருகப்பா அவர்கள் பலரிடமும் கூறுவதுண்டு. அக்காலத்தில் செட்டிமார்நாட்டுப்பெண்கள் முருகப்பாவைப்பற்றிப் பேசிக்கொள்ளும் ஒரு செய்தி மிக வேடிக்கையானதாகும். "முருகப்பன் சொல்வதெல்லாம் சரிதான். ஆனால் பெண்கள் ரவிக்கைபோட வேண்டுமென்று அவன் கூறுவதுதான் நமக்குப்பிடிக்கவில்லை" என்பார்களாம் அவர்கள்! இந்த வார்த்தைகள் இருபது ஆண்டுக்கு முன்னிருந்த செட்டிமார்நாட்டைப் படம் பிடித்துக் காட்டுகின்றன! ஆனால் செட்டிமார்நாடு இன்று எவ்வளவோ முன்னேறி விட்டது. 'ரவிக்கை' (இதனை 'ஜாக்கெட்' என்று ஆங்கிலத்தில் சொன்னால் தான் தமிழ்நாட்டில் புரியும் என்கிறார் பக்கத்திலிருக்கும் நண்பர்) அணிவது அவசியம்!' என்று வற்புறுத்தவேண்டிய அளவுக்கு அந்நாளில் மக்களிடம் பழமை மோகம் குடிகொண்டிருந்திருக்கிறது என்பதையே இச்செய்தி தெளிவுபடுத்துகிறது! புனிதமான சீர்திருத்த வீரர்கள் பழமையின் ஆதிக்கத்தை வெட்டி வீழ்த்தியே வாகைசூடியிருக்கிறார்கள்! 'சீர்திருத்தம்' பேசும் புதியவர்களோ 'போலி' மாறுதல்களால் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்கிறார்கள்!

புதுமைப்பித்தன் சிறுகதைப் பரிசு



பரிசு ரூ. 250

*

'பொன்னி' அறிவிக்கும்

முதல் சிறுகதைப் போட்டி

முதற் பரிசு ரூ. 125
இரண்டாவது பரிசு ரூ. 75
மூன்ருவது பரிசு ரூ. 50

திர்ப்புக் குழுவினர் :

அறிஞர் அப்பாத்துரை
திரு. விந்தன்
,, அகிலன்
,, டி. கே. சீனிவாசன்
,, முருகுசுப்பிரமணியன்

1. *1952 ஜுன் 30-ம்* தேதிக்குள் வரும் சிறுகதைகளே பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

2. சிறுகதைகள் இதுவரையில் வெளிவராததாகவும் மொழிபெயர்ப்பாகவோ, தழுவலாகவோ இல்லாமல் சொந்தமாய் எழுதியதாகவும் இருக்கவேண்டும். கதைகளை அனுப்பும்போது மேலுறையில் *'சிறுகதைப் போட்டிக்கு'* என்று குறிப்பிடவேண்டும்.

3. மேற்குறிப்பிட்ட ஐந்துபேர்கொண்ட தீர்ப்புக் குழுவினர் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுப்பார்கள். அவர்களில் பெரும்பாலோருடைய தீர்ப்பே முடிவானது.

4. பரிசுபெறும் சிறுகதைகளைப் 'பொன்னி'யில் வெளியிடும் உரிமை அலுவலகத்திற்கு உண்டு. வெளியிடத்தக்கதெனத் தேர்ந்தெடுக்கப்படும் மற்ற சிறுகதைகளுக்கு ஆசிரியர் கருத்துப்படி அன்பளிப்பு வழங்கப்படும்.

5. போட்டிக்கு அனுப்பப்படும் சிறுகதைகள் 'பொன்னி'யில் 6 பக்கத்திற்குக் குறையாமலும், 16 பக்கத்திற்கு மேற்படாமலும் வரக்கூடியவையாக இருக்கவேண்டும். கதைகளைத் தாளின் ஒரு பக்கம் மட்டும் தெளிவான கையெழுத்தில் எழுதியனுப்ப வேண்டும்.

6. எந்தச் சிறுகதையும் பரிசுபெறத் தக்கதல்ல என்று தீர்ப்புக் குழுவினர் கருதினல், வந்தவற்றுள் சிறந்த கதைகளுக்கு ஆசிரியர் விருப்பப்படி பரிசுகள் அளிக்கப்படும்.

7. இப் போட்டிபற்றி எழும் எல்லா ஐயப்பாடுகளிலும் ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. விதிகளை மாற்றவும் திருத்தவும் அவருக்கு உரிமையுண்டு.

8. இப்போட்டிக்குக் கதைகளை அனுப்புபவர்கள், அக்கதைகளுடன் போதிய அஞ்சல்தலை அனுப்பினல் மட்டுமே கையெழுத்துப் பிரதிகளைத் திருப்பியனுப்ப முடியும்.

9. போட்டிக்கு ஒருவரே ஒன்றுக்கு மேற்பட்ட கதைகள் அனுப்பலாம். ஆனல் யாரும் ஒரு பரிசுக்குமேல் பெறமுடியாது.

துயிலே



தொழிலாளி

காலையிலே துயிலெழுந்து நீரைப் பாய்ச்சிக்
களையெடுத்துக் கதிர்காத்துப் புவியைக் காத்தோம்
ஆலையிலே நூல்நூற்றோம் அவற்றால் நல்ல
ஆடைகளை ஆக்கிஉயர் மானங் காத்தோம்
மாலைவரை வீடுகட்டி மரமும் ஏறி
மடவாரை நகர்க்கனுப்பி உடல்அலுக்க
வேலைசெய்தோம் உணவில்லை ; உறங்கச் சென்றோம்
வேதனையை மறந்திருக்கத் துயிலே ! வாவா !

முதலாளி

பெட்டகத்துப் பணம்நிறைத்துப் பூட்டிவைத்த
பெருஞ்சாவிக் கொத்தின்மேல் திண்டு வைத்துக்
கட்டில்மேல் விரித்திருக்கும் மெத்தை மீது
கண்ணயரச் சென்றேன்நான் கடைக்க ணக்கும்
வட்டிவயல் வரவிருப்பும் செல்வம் இன்னும்
வரும்வழியும் எண்ணுவதால் உறக்கம் இல்லை
கட்டிவைத்த பொருள்கொண்டு வாங்கு தற்குக்
கடைச்சரக்கா அவ்வுறக்கம் ? என்ன செய்வேன் ?

காதலன்

புத்தகங்கள் படித்துரை விரித்த போதும்
புதுக்கவிகள் எழுதிடநான் எண்ணும் போதும்
புத்தம்புதுப் படங்காணச் சென்ற போதும்
பொல்லாத துயிலேநீ தொல்லை தந்தாய் !
கத்துகுரல் புள்ளொடுங்க வருவேன் என்றாள்
கடையாமம் வந்துமவள் வந்தாள் இல்லை
இத்தனைபோழ் தாகியும்கண் மூட வில்லை
இரிந்தோடி மறைந்தாயே காதல் முன்னே !

காதலி

நாயொலியால் பெற்றோரும் விழித்துவிட்டார்
நான்வருவேன் என்றவரும் காத்துநிற்பார்
தாயுள்ளம் காட்டாத தலையன் பைத்தான்
தந்திடுவார் என்றிருந்த எண்ணம் வீணாய்ப்
போயிற்றே ! எனைத்துயிலே ! நீயும் வஞ்சம்
புரிகின்றாய் ! நீவந்தால் கனவி லேனும்
போயவரைத் தழுவிடுவேன் அவரும் நானும்
புதுவுலகம் சென்றிடுவோம் நீவா ராயோ ?

ஆசிரியன்

கன்னிதழ்கள் அறியாமல் குவியப் பெற்றுக்
கைப்பொருள்கள் நழுவிவிழக் குறித்த ஒன்றைப்
பண்ணுங்கால் மெய்சோரக் கையும் சோரப்
பாதியிலே அச்செயல்தான் சோர்ந்து நிற்க
எண்ணங்கள் ஓடாமல் நிலைத்து நிற்க
இருக்கின்ற கடன்துயரும் வறுமை நோயும
மண்ணகத்தில் மறந்திருக்க அமைதி எங்கும்
மருவிடநின் றாடுகின்ற துயிலே! வாழ்க!

மாணவன்

நாடகங்கள் நிழற்படங்கள் காணும் போதும்
நண்பருடன் அரட்டையடித் திருக்கும் போதும்
ஊடகத்தே வாராமல் உதவி செய்தாய்!
உவகையுற்றேன்; தேர்வென்னும் கூற்றுக் கஞ்சிப்
பாடங்கள் படிப்பதற்குத் தேநீர் மாந்தி
பாடுபட்டுப் புத்தகத்தை விரித்து வைத்தால்
ஆடகத்தாள் பெயர்த்துநடம் செய்கின் றாயே!
ஐயையோ என்செய்வேன் துயிலே! போபோ!

திருடன்

எங்கள்குலம் காக்கின்ற துயில ணங்கே!
என்னகைம்மா றுனக்களிக்க வல்லோம் நாங்கள்
வெங்கொடுமை செய்துபணம் சேர்த்து வைத்தோன்
வெளிமாடிக் கட்டிலிலே உறங்கு கின்றான்
பொங்கிருட்டில் உழைப்பாலே சோர்ந்து மற்றோர்
புரளாமல் கண்ணயர்ந்தார்; கன்னக் கோலைத்
தங்குதடை யில்லாமல் சாத்து கின்றோம்
தாயேநீ இல்லையெனில் ஏது வாழ்வு?

துறவி

எனையாளும் இறைவாஉன் அடியைப் போற்ற
இளங்காலை நீராடிப் பூசை செய்வேன்
வினையாளர் பரிமாறச் சுவைசேர் உண்டி
விதவிதமாய் உண்பேன்பின் பழமும் பாலும்
நினையாத போதெல்லாம் முன்னே நிற்கும்
நிறைபணமும் வசதிகளும் நிறையப் பெற்றும்
மனையாளாய்ப் பெண்ணொருத்தி இல்லை என்ற
மனக்கவலை கௌவியதால் உறக்கம் இல்லை.



ஆடும் மாடும்

டி.கே.சீனிவாசன்



பன்னிரண்டாம் அத்தியாயம்

பவித்திரமே உருவான இந்த நாட்டின் பரிதாபத்துக்குரிய பண்பு, அது கண்ணீர் விட்டவர்களையே கற்புக்கரசிகளாக ஆக்கியிருப்பதுதான்; சிரித்தவள் சிதைந்தவளாகவே ஆக்கப்பட்டாள்! அதனால்தான் என்னவோ சித்திரவதைக்கு ஆளாகத் துணியும் பெண்களால் மட்டுமே சீர்குலையாமலும் இருக்க முடிகிறது.

"என்ன சுந்தரி, உன் அக்காளுக்கு இன்னுமா மனம் மாறவில்லை?" என்று கேட்டார் சினிமாக் கம்பெனி முதலாளி ஒரு நாள்.

அவர் குரலில் வழக்கமாகத் தொனிக்கும் தாபத்தைவிட வேகந்தான் அதிகமாக இருந்தது. சுந்தரி முதலில் திகைத்துப் போனாள்; ஆனாலும் சமாளித்துக்கொண்டாள். எதற்கும் எளிதில் பணிந்துவிடும் அந்தப் பெண்ணால் எல்லோரையும் தனக்குப் பணியவைக்கவும் தெரிந்திருந்தது. குறும்பாக அவரைப் பார்த்துச் சிரித்தாள்—அவரும் குழைந்தே போய்விட்டார்.

"நீங்கள்கூட இப்படிப் பேசுகிறீர்களே! வியாபாரிதான் காயை வெம்பச்செய்து விற்கக் கொண்டுவருவான்; வாங்குபவன் கனியும்வரையில் அல்லவா காத்திருக்கவேண்டும்!" என்றாள்.

இந்தப் பதில் அவருக்குத் திருப்தியளிக்கவில்லை. ஆனாலும் அப்போது அவள் செய்த சாகசத்தால் எதிர்த்து மடக்கும் துணிவை இழந்துவிட்டார் அந்த முதலாளி.

"அதற்குச் சொல்லவில்லை. ஒப்பந்தம் முடிவதற்குள் ஏதாவதொரு படத்தில் நடித்தால்தானே, பின்னால் ஒத்தாசை

செய்ய நமக்கும் மனம் வரும்" என்றார்.

அசட்டுத்தனமாக உளறும் அவரைப் பார்க்கச் சுந்தரிக்குச் சிரிப்புத்தான் வந்தது. அப்போது பிடித்துக்கொண்டிருந்த எந்தப் படத்துக்கும் ஆள் தேவையாகஇல்லை. அதுவுமல்லாமல் அந்த மனிதனின் பிறவிக் குணம்...! மீன் பிடிக்கிறோம் என்று நினைத்துக்கொண்டு இவன் பாம்பிருக்கும் இடத்தில் வலைவீசுகிறானே என்ற பரிதாப உணர்ச்சிதான் அவளுக்கு ஏற்பட்டது.

"ஒத்தாசை செய்யத்தானே நீங்கள் இந்த உடலை எடுத்திருக்கிறீர்கள்?" என்றாள்.

அந்த முதலாளிக்கு இதைக் கேட்டவுடன் ஆனந்தம் தாங்க முடியவில்லை.


"சீ! நீ மகா குறும்புக்காரி!'' என்று சொல்லிவிட்டு, அத்தோடு பேச்சை முடித்துக் கொண்டார்.

அந்தப் பெரிய உருவம் மறையும் வரையில் அதையே பார்த்துக்கொண்டே நின்றாள் சுந்தரி. வெட்டுக்கிளிக்கும் பட்டுப் பூச்சிக்கும் உள்ள வேற்றுமை அவளுக்குத் தெரிந்ததுதான். ஆனால் ...... பட்டுப்பூச்சியின் உறவுக்காக வெட்டுக்கிளி அலைவதுதான்......

அன்று முழுவதும் அவளுக்கு ஒரே கவலையாக இருந்தது. வேட்கைக்கு வேகம் மட்டும் ஏற்பட்டுவிட்டால் அதன் விளைவுகள் விபரீதமாக இருக்கும் என்பதை உணர்ந்தவள் அவள். ஆனால்இந்தமோகனா ..?கூண்டில் சிக்கிய பிறகு என்னதான் கூச்சலிட்டாலும் பலன் ஏற்படாது என்பது ஏன் அவளுக்கு தெரியாமல் போய்விட்டது? எத்தனையோ தடவைகளில் அவளோடு வாதாடியிருக்கிறாள்; உணர்ச்சியும் உற்சாகமும் நிறைந்த பேச்சால் அவள் உள்ளத்தை உருமாற்ற என்னென்னவோ முயற்சிகள் செய்து பார்த்துவிட்டாள். ஆனால் அப்போதெல்லாம் மோகனாவின் மனநிலை...? பாந்த பாழ்வெளியே சூழ்நிலையாக இருக்கும் பாலைவனத்தில் நடக்கும் தனி மனிதனிடைய பரிதாபமான தோற்றமே அவள் பார்வையிலும் படிந்திருக்கும். 'ஏதோ ஒரு பேய்க்காற்று இந்த மலரைச் சுற்றிச் சுழலுகிறது. அதனால்தான் இதன் இதழ்கள் இப்படித் துடிக்கின்றன' என்றுதான் தோன்றியது அவளுக்கு. அந்தப் பேய்க்காற்று என்னவாகத்தான் இருக்கும்? ஒருவேளை அது சோமுவின் உருவில்.........

இழந்த நிம்மதியைத்திரும்பப் பெறமுடியாமல் திகைத்துப் போயிருந்தாள் மோகனா. மலைப் பாம்பு போல அவள் கழுத்தை நெறித்துக்கொண்டிருக்கும் சோமு — நாளொன்றுக்கு எழெட்டுத் தடவைகள் அவளைத் தேடி அலைந்துகொண்டிருக்கும் சினிமாக்கம்பெனி முதலாளி! அவளுக்கும் நல்வாழ்வுக்கும் இடையே கத்தரிக்கோலான அவர்கள்... தனிமைவேறு அவ

ளுக்குத் தாங்கமுடியாத தொல்லையைக் கொடுத்தது. சிதறிய மரக்கலத்தின் சேதமான ஒரு துண்டிலிருந்து துடித்துக் கொண்டிருந்த அவளுக்கு, அந்தத் துண்டும் நீரில் ஊறிப்போய் முழுகும் நிலைக்கு வந்துவிட்டது போலத் தோன்றிற்று. சித்திரக் கூடம் அமைக்கச் சொல்லிச் சேகரன் வேறு அவளை வற்புறுத்தத் தொடங்கினன். வாழ்வை வீணையாக்கி, அதில் தன் இதய வேதனையைக் கீதமாக இசைத்தால், அந்தப் போதையிலேயே தன்னை மறந்து விடலாம் என்று நினைத்தாள் அந்தப் பேதை.



நினைவு நிகழ்ச்சிகளாக உரு வாக நெடுநேரம் பிடிக்கவில்லை. அவள் மனம் மலர்ந்தாள்—சேகரன் அதன் மணம் நுகர்ந்தான்!

மென்மை உணர்ச்சிகட்கு மெருகிடும் வெண்ணிலவு பட்டு ஒளிவீசும் அவள் உருவத்தைப் பார்த்துக்கொண்டே இருப்பான் அந்த ஓவியன். அவன் இதயத் திரையில் எத்தனையோ கோணங்களில் படிந்த எழில் எண்ணச் சுழலாக இருந்து இன்புறச் செய்தது. மாலைநேரத்துக் கதிரவனின் மஞ்சள் நிறக் கதிர்கள் அந்த மனோகரமான முகத்தில் பட்டுப் பரிமளிக்கும் போது மதிமயங்கிப் போவான். உதயசூரியன் ஒளி பட்டு முத்தென மிளிர்வாள்—கோர்த்து அணிந்துகொள்ள அந்த அழகுக்குத் தனி உருவம் இல்லையே என ஏங்குவான். சித்திரத்துக்காகத் தேடித் தொடாப்பட்டவள் சிலையானாள் அவன் உள்ளத்தில். ஓவியர் திட்ட மினைத்தவன் காவியம் புனையக் கற்றுக்கொண்டான்.

சுந்தரி மட்டும் தினந்தினம் தவறாமல் ஸ்டுடியோவுக்குப் போய் வந்துகொண்டிருந்தாள். சோமு...? கரையில் மோதிய கடலலைபோல் சிதறிய தன் திட்டங்களை எண்ணி மனம்புழுங்கினான். எத்தனையோ தடவைகள் அவர்கள் இருவரையும் அணுகிப் பார்த்தான். சாரைக்கு வேகம் வாராவிட்டாலும் நாகம சிறத்தான் செய்தது.



ஆனால்... காலம்மட்டும் எப்போதும் கதம்பமாலையாகத்தான் இருந்து வருகிறது—ஒரே வித மலர்களால் அதைத் தொடுக்க எவராலுமே முடிந்ததில்லை. அலைந்து அலுத்துப் போன சினிமாக் கம்பெனிமுதலாளிக்கு ஆத்திரம் ஏற்பட்டுவிட்டது. பறித்துச் சாப்பிடக்

கொண்டுவந்த கனிக்குப் பாது காப்பாக இருக்கும் வேலியாகவே எத்தனை நாட்களுக்குத்தான் இருப்பது? வக்கீல் நோட்டீஸ் கொடுத்துவிட்டார்.

"இந்த உதாசினம் செய்து விட்டால் ஊர் சிரிக்கும் நிலை ஏற் படும் அக்கா" என்றாள் சுந்தரி.

சேகருக்கும் மோகனாவுக்கும் திகில் ஏற்பட்டுவிட்டது. அப் போதிருந்த நிலையில் ஆலோசனை கேட்கச் சுந்தரி ஒருத்திதான் இருந்தாள் அவர்களுக்கு. மனித இதயமும் தட்பவெட்ப நிலைக் கேற்ப மாறுதலடையக்கூடியது தானே! மோகனா இசைந்து விட்டாள்.

அன்று முதலாளி தன் காரையே அனுப்பிவைத்திருந் தார்.

"போகலாமா, அக்கா?" என்று உறுதிப்படுத்திக்கொள்ள, ஒரு தடவை கேட்டுவைத்தாள் சுந்தரி.

"புறப்படு, போகலாம்" என்று கிளம்பினாள் மோகனா.

"ஓ! இப்படியா போவது? நடிகை என்றால் நாலுபேர் கண் களுக்குக் கவர்ச்சிகரமாக இருக்க வேண்டாமா?" என்று இல்லாத அலங்காரங்களையெல்லாம் சுந்தரி அவளுக்குச் செய்யத் தொடங் கினாள்.

கண்ணாடியில் தன்னைப் பார்த் துக்கொண்டபோது மோகனா வுக்கே அவளை அடையாளம் புரிந்துகொள்ள முடியவில்லை. மண்மூடிக்கிடந்த தங்கம் பொற் கொல்லன் உலையிலிருந்து வெளிப்படும்போது தோன்று வதுபோலவே இருந்தாள்.

"இன்னும் மெருகேறினால் எவ்வளவோ உயர்ந்துவிடும்" என்று சொல்லிக்கொண்டே செல்லமாக அவள் கன்னத்தில் தட்டினாள் சுந்தரி.

தன்னை விலைகூறப் போகி றாளா, அல்லது அடகுவைக்க அழைத்துச் செல்லுகிறாளா என்பதை நிர்ணயிக்க முடியாமல் திண்டாடினாள் மோகனா.

"நடிப்புக்கூடத் தேவையில்லை அக்கா, நட்சத்திரமாவதற்கு. பத் துப்பேர் பார்வையை இழுக்கும் படி நடந்துகொண்டாலே போதும், தலைமேல் தூக்கிக் கொண்டு கூத்தாடத் தொடங்கு வார்கள்" என்று விளக்கம் கொடுத்தாள் சுந்தரி.

கார் போய்க்கொண்டிருந்தது. காலை நேரமாகையால் வீதி நிறைய மக்கள் நிறைந்திருந் தனர். வாலிபர் வயோதிகர் உட்பட அத்தனைபேரும் கார் போகும் அந்த வேகத்திலும் பார்வையைப் உள்ளே புகுத்தி னர். சர்க்கஸ் தொடங்குவதற்கு முன்னால் கூண்டோடு மிருகங் களை வீதிவழியே இழுத்துச்செல் லுவதை மோகனா பார்த்திருக் கிறாள். இன்று அதே காட்சி அவள் கவனத்துக்கு வந்தது. திரும்பிச் சுந்தரியைப் பார்த் தாள். அலட்சியமான தோற் றத்தை வரவழைத்துக்கொண்டு அமர்ந்திருந்தாள் அவள்; விழி கள் மட்டும், திருட்டுத்தனமாக வீதிப்பக்கம் அடிக்கடி திரும்பின. அத்தனைபேர் பார்வையும் அவ

அச் சுற்றிப் படருவதில் ஆனந்தம் அடைவதுபோலத் தோன்றினாள். விட்டுப்பிரிந்த வெறுப்பு வெகு சீக்கிரத்தில் மோகனாவின் உள்ளத்தில் வெடித்து முளைவிட்டு வேரூன்றவும் தொடங்கிவிட்டது. இந்த 'இமிடேஷன்' சரக்குக்கு இருக்கும் மதிப்பு...! தான் இவன் கையில் எப்படிச் சிக்க நேர்ந்தது என்பதுதான் அவளுக்கு விளங்கவில்லை. வீதியில் திரிந்தபோது சுழலில் சிக்கிய துரும்பாகச் சுழன்றாள். சுகமில்லை — துக்கமில்லை! 'சோறு, சோறு' என்ற ஒரே கவலைதான். எப்படியோ அவளை வீட்டுக்கு அழைத்து வந்தான் சோமு. அங்கே அவள் சந்தித்த சக்கு...! சலனம் துளிக்கூட வெளிக்குத் தெரியாமல் ஓடும் நீரோடை போன்ற அந்தப் பெண்ணின் உள்ளம் அவளுக்குச் சாந்தியைக்கொடுத்தது. அந்தச் சாந்திதான் சன்மார்க்கத்துக்கு அடிகோலியது அவள் உள்ளத்தில். ஆனால் இந்தச் சுந்தரி...? கரையை உடைத்துக் கொண்டோடும் காட்டாறு! தொடக்கத்தையும் முடிவையும் பற்றிய தொல்லையே இல்லை அதற்கு. ஆனால் சமுதாயம் என்னவோ அவளுக்கும் அந்தஸ்தைக் கொடுக்கத்தான் செய்தது. தனித்து வாழும் சக்தியை மட்டும் உண்டாக்கிக் கொண்டால், தன் தலைமேல் ஏறிச் சவாரி செய்யக்கூட இடங்கொடுக்கும் இந்த உலகம்...!

"இறங்கேன் அக்கா. என்ன யோசனை செய்து கொண்டிருக்கிறாய்?" என்ற சுந்தரியின் குரல் கேட்டது.

வர்ணப் பூச்சால் வசிகரித்துக் கொண்டிருந்த ஒரு கட்டிடத்தின் எதிரே கார் நின்றுகொண்டிருந்தது. அதன் இருபுறமும் வரிசை வரிசையாகக் குரோட்டன்ஸ் செடிகள் வைக்கப்பட்டிருந்தன. சுந்தரியும் மோகனாவும் கீழே இறங்கினர்.

"ஏது, சரக்கு புதிசு போலே இருக்கே!"

"உள்ளே போனால் தன்னாலே பழசாப் போயிடுது!"

யாரோ கேட்டார்கள்—எங்கிருந்தோ அந்தக் கேள்விக்குப் பதில் கிடைத்தது! மோகனாவின் உடலில் நெருப்பை அள்ளிக்கொட்டியது போல இருந்தது; சுந்தரியின் கையை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டாள்.

"உங்களுக்காகத்தான் முதலாளி காத்துக்கொண்டிருக்கிறார்" என்றான் வாயிலில் நின்ற வேலையாள்.

பாதி திறந்திருந்த கதவு வழியே முதலாளியின் அறையின் உட்பாகம் தெரிந்தது. மேஜைமேல் உட்கார்ந்து யாரோ ஒரு பெண் அவரோடு பேசிக்கொண்டிருந்தாள். மோகனாவை அழைத்துக்கொண்டு சுந்தரி உள்ளே நுழைந்தாள். அந்தப் பெண் சாவதானமாகக் கீழே இறங்கி நாற்காலியில் அமர்ந்தாள். அந்த முதலாளிக்குத்தான் வெட்கமேற்பட்டதுபோலத் தோன்றியது.

அந்த அறை முழுதும் பார்வைக்குக் குளிர்ச்சியாகப் பச்சைச் சாயம் பூசியிருந்தார்கள். ஒரு பெண்ணை எத்தனை எத்தனை விதமாக அலங்கோலப்படுத்திக் காட்டலாமோ, அத்தனைவிதங்களையும் ஒன்றுகூட விட்டுப் போகாமல் படம்பிடித்துச் சுற்றிலும் மாட்டப்பட்டிருந்தது. மேஜைமேல் உட்கார்ந்திருந்த பெண் நாற்காலியில் இருந்து கொண்டு சாவதானமாக ஒரு சினிமாப் பத்திரிகையைப் புரட்டிக்கொண்டிருந்தாள். உதட்டைப் பிதுக்கிக்கொண்டு அவள் ஒவ்வொரு பக்கமாகப் புரட்டியதைப் பார்த்தால் உலகமே அவள் மனநிலைக்கு ஒத்துவராததைப் போலத் தோன்றிற்று.

"சும்மா உட்காருங்கள். இங்கே நீங்கள் சகஜமாகப் பழகலாம்; வித்தியாசமாக நினைக்கவேண்டாம்" என்றார் அந்த முதலாளி.

"இந்தமாதிரி இடங்களில்தான் அக்கா பெண்களுக்கு உண்மையிலேயே உரிமை கொடுக்க முன்வருகிறார்கள்!" என்றாள் சுந்தரி.

மோகனாவுக்கு என்னவோ போலிருந்தது — முதலாளியின் முகத்தில் அசடு வழிந்தது—எந்த விதமான மாறுதலுக்கும் இடங்கொடுக்காமலே உட்கார்ந்திருந்தது அந்தப் 'புதுமுகம்!' அவளையே கூர்ந்து கவனித்தாள் மோகனா. அடிக்கடி நாக்கால் தன் உதடுகளை நனைத்துக்கொண்டிருந்தாள் அவள். அளவுக்கு மீறிய பொறுமை வழிந்தோடுவதை எடுத்துக்காட்டியது அந்த முகம். நாகம்போல் ஒளிவிட்ட விழிகள்...! நஞ்சுமட்டுந்தான் இருந்தது—நளினம் துளிக்கூட இல்லை அவற்றில்?

"ஸ்டுடியோவை ஒரு தடவைச் சுற்றிக்காட்டிவிட்டு வருகிறேன்" என்றெழுந்தாள் சுந்தரி.

"காப்பி வாங்கிவர ஆளனுப்பியிருக்கிறேனே; சாப்பிட்டுவிட்டுப் போகலாமே" என்று உபசரித்தார் முதலாளி.

"பரவாயில்லை, வந்துகுடித்துக் கொள்ளுகிறோம்" என்று சுந்தரியே பதிலளித்தாள்.

"அதற்குள் ஆறிவிடுமே!" என்று அங்கலாய்த்துக் கொண்டார் முதலாளி.

"நாழியானால் எதுவுமே ஆறித்தானே போகிறது!" என்று அப்போதுதான் பேசினாள், அந்தப் புதுப்பெண்.

எப்படியோ நிலைமையைச் சமாளித்துக்கொண்டு மோகனாவை அங்கிருந்து அழைத்துச் சென்றாள் சுந்தரி. வழியில், "அந்தப் பெண்ணைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?" என்று கேட்டாள் மோகனா.

"பெண்களை விளையாட்டுக் கருவிகளாக ஆக்கும் இப்படிப்பட்ட மனிதர்களுக்கு, சமயத்தில் அவர்கள் வேதனை ஊற்றுக்களாகவும் ஆகிவிடுவார்கள் என்பது புரியாமல் போகிறது" என்று சுந்தரி சொன்னாள்.

ஏதோ ஒரு படத்துக்கான காட்சியை அங்கே பிடித்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் அங்கே போனபோது எல்லா

விழிகளும் மோகனவைச் சுற்றியே மொய்க்கத் தொடங்கின. புதிதான அந்தச் சூழ்நிலை மோகனவுக்கு ஒரு புதிர்போல இருந்தது. அட்டையும் காகிதமும் அழகான நந்தவனத்தை உருவாக்கியிருந்தன. பட்டுச் சட்டைகளை உடுத்திய பவுடர் பூசிய முகங்கள் அங்கே அலைந்து கொண்டிருந்தன. சுற்றிலும் சாமான்கள் எல்லாம் தாறுமாருகச் சிதறிக்கிடந்தன. இடையிடையே காதில் விழுந்த அந்த ஏளனப் பேச்சுக்கள்...... கூலிவேலை செய்பவர்கள்கூடக் காறித்துப்பும்படி இருந்தன அவை. காகிதப் பூ ஒன்றைக் கையால் பிடித்துக்கொண்டு ஏதோ கதறிக் கொண்டிருந்தாள் ஒரு பெண்; பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஆணும் தன்னல் இயன்றவரை பிதற்றிக் கொண்டிருந்தான். வியர்வை ஊற்றை வெளிப்படுத்திக் கொண்டிருந்த அந்தப் பரிதாபமான உடல்களை வெய்யிலில் நிறுத்திவைத்திருந்தார்கள். "மணமற்ற மலர்களும் – குணங்கெட்ட மனிதர்களும்!" பிடித்துக் கொண்டிருந்த அந்தப் படத்துக்கு இந்தப் பெயரை வைத்தால் எவ்வளவு பொருத்தமாக இருக்கும் என்று எண்ணிப்பார்த்தாள் மோகன. இதுவரையில் அவள் மிருகங்களை மனிதர்கள் பழக்குகிருர்கள் என்பதைத்தான் தெரிந்திருந்தாள். அந்த விசித்திரமான இடத்தில்தான் மனிதர்களையேபழக்கும்மனிதனைமுதன்முதலாக அவள் பார்க்க நேர்ந்தது. அந்த மனிதன் பேசினல் அங்கிருந்த அத்தனை பேருக்குமே கதிகலங்கிற்று.

"சுந்தரி! இதைத்தான் கலைக்கூடம் என்ருயா?" என்று கேட்டாள் மோகன.

"ஏன் அக்கா, உனக்கு எப்படித் தெரிகிறது?" என்ருள் சுந்தரி குறும்பாக.

"இந்தக் கழிசடைகள் மத்தியில் கலை எப்படி மலரும்?" என்ற கடுமையே உருவான சொற்கள் மோகனவிடமிருந்து வெளிப்பட்டன.

"எதுவும் உருவாகும்போது அப்படித்தான் இருக்கும்" என்ற புதுக்குரல் கேட்டது.

இருவருமே திரும்பிப் பார்த்தனர். முதலாளி அறையில் இருந்த நடிகை நின்றுகொண்டிருந்தாள்.

"பிறந்தவுடன், குழந்தை கூடப் பார்க்கப் பிடிக்காமல் தான் இருக்கும்—வளர்ந்தால் வனப்பு தன்னலே வந்துவிடும்" என்று விட்டுப்போனதையும் ஒட்டுப்போட்டாள் அவள்.

வேடிக்கையாக அவளையே மோகன பார்த்துக்கொண்டிருந்தது அவளுக்கு என்னவோ போலத்தான் இருந்திருக்க வேண்டும்.

"என் பெயர் லீலா!" என்று தன்னைத்தானே அறிமுகப்படுத்திக்கொண்டாள். அவள் பேச்சில் பரிதாபந்தான் தொனித்தது.

"அது உன் அப்பா அம்மா செய்த தவறு! நாங்கள் என்ன



செய்யமுடியும்?" என்று வெடுக்கென்று பதிலளித்தாள் சுந்தரி.

மோகனா சிரித்துவிட்டாள்—முகத்தைக் கோணிக்கொண்டு அந்த லீலா அங்கிருந்து நகன்றாள்.

வீட்டுக்கு வந்ததும் என்னென்னவோ விளக்கங்கள் கொடுத்துப்பார்த்தாள் சுந்தரி. எதையும் மோகனா ஏற்கவில்லை. எத்தனையோ தடவைகள் அவள் அழுதிருக்கிறாள். இப்போது அவளுக்கு அழுகை வரவில்லை; உள்ளந்தான் குருதியைக் கொட்டிக் கொண்டிருந்தது. சேகரன் அவளிடம் ஏதோ பேச வந்தான்; அவனைக்கூட அலட்சியம் செய்துவிட்டாள். உலையில் தவறி விழுந்துவிட்டதால் உடலும் உலோகத்தோடு சேர்ந்து உருகி ஓடுவதைப்போலவே தோன்றியது.

மாலை கதிரவன் மறையும் நேரம். என்றைக்கும் வானத்தில் காணப்படும் தெளிவு இன்று இல்லை. திப்பிதிப்பியாக மேகங்கள் படிந்திருந்தன. சிலந்தி வலையில் சிக்கிய பொன் வண்டைப்போலக் காட்சியளித்த கதிரவனையே பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள் மோகனா. பாதி மறைந்தும், பாதி வெளிக்குத் தெரிந்தும் இருந்த அவன் உருவம், ஒருவேளை தன்னிடம் சிக்கிய அந்தப் பொன்வண்டைச் சிலந்தி விழுங்கிக்கொண்டிருக்கிறதோ என்று நினைக்கும்படி இருந்தது.

அவளுக்கு யார்மேலும் ஆத்திரம் ஏற்படவில்லை. மென்மையைப் பெண்களுக்கும், மிருக வெறியை ஆண்களுக்கும்

கொடுத்த அந்த 'ஆண்டவன்' மேல்தான் கோபம் கோபமாக வந்தது. காலையில் அவள் சந்தித்த மனிதர்கள் நினைவு அவளுக்குத் தோன்றியது. "பாவம் ஆண்கள்! பரிதாபத்துக்குரியவர்கள்!" என்று மெல்ல முணுமுணுத்துக்கொண்டாள். சஞ்சலம் அவளிடம் சலனத்தை மட்டும் உண்டாக்கவில்லை, சந்தேகங்களையும் கிளப்பிவிட்டது. சுந்தரி ஒருநாள் சொன்ன சொற்கள் திடீரென அவள் நினைவுக்குத் தட்டுப்பட்டன.

'அக்கா! ஆணுடைய தொடர்புமட்டும் ஏற்படாவிட்டால் பெண் பேயாகி விடுவாள்!'

வெறுப்புக் கலந்த சிரிப்புதான் வெளிப்பட்டது அப்போது அவளுக்கு, அதை நினைத்தவுடன். அவளே ஒரு பெண்ணாக இருந்தும் எப்படித் தன் குலத்தைப் பற்றியே தாறுமாறாக...

"பேயானாலும் பரவாயில்லை, சுந்தரி, ஆணுடைய கையில் சிக்கிப் பொம்மையாகும் நிலை மட்டும் எந்தப் பெண்ணுக்கும் ஏற்படவேண்டாம்!" என்று உரத்தே சொல்லி விட்டாள்.

பக்கத்திலிருந்து சுந்தரி சிரித்தபோதுதான், தன்னை மறந்திருந்தது அவளுக்குத் தெரிய வந்தது.

"நான் அன்று ஒரு பாதியைத் தான் அக்கா, சொன்னேன். இன்னொரு பாதி பாக்கியிருக்கிறது" என்று சொல்லிக் கொண்டே பக்கத்தில் உட்கார்ந்தாள் சுந்தரி.

தெளிவற்ற பார்வையோடு அவளையே பார்த்தாள் மோகனா.

"பெண்ணுடைய தொடர்பேற்படாவிட்டால் ஆண் மிருகமாகி விடுவான்!" என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள் அவள்.

"தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளவும் மிருகமாகத்தானே அலைகிறான்!"

கசப்பே உருவான அந்தச் சொற்களில் களிப்படைய என்ன தான் இருந்ததோ தெரியவில்லை, இருவருமே சேர்ந்து சிரித்தனர்.

"ஒப்பந்தம் முடியும் வரையில் தானே உனக்கு இந்தத் தொல்லை? முடிந்தவுடன் நீயே விலகிக்கொள்ளலாமே!" என்று மெல்லப் பேச்சைத் துவக்கினாள் சுந்தரி.

"சேற்றிலே கால்வைத்து விட்டு, அதிலிருந்து மீள முடியுமா, சுந்தரி?" என்று மோகனா ஏக்கத்தோடு கேட்டபோது, தளர்ந்து போயிருந்த அவள் மனநிலை தன்னாலே வெளிப்பட்டது.

"சேறு நிறைந்த குட்டையல்ல சினிமா உலகம். கலை உலகம் களங்கமற்றுத்தான் இருந்தது; சில மாடுகள் அதில் புகுந்து அதைச் சேறாக்கி விட்டன"

பேசிக்கொண்டே வந்த சுந்தரிக்குத் திடீரென்று வாயடைத்துப் போனது. அவள் குரல் தழுதழுத்தது. காய்ந்து போயிருந்த புண்ணைத் தானே சொறிந்துவிட்டதை உணர்ந்தாள். இதுவரையில் நல்வாழ்வை

மனதின் ஆழத்தில் புதைத்து, நாசத்தால் அதை மூடி மறைத்திருந்தாள். பள்ளந்தோண்டியவுடன் பாய்ந்துவரும் நீரூற்றைப் போல, ஒழுக்க உணர்ச்சிகள் அவளை மீறி வெளிப்பட்டன. விம்மி விம்மி அழத் தொடங்கினாள் உடனே. கணவன் சாகக் காரணமாக இருந்தவள் அவனுடைய கல்லறையைக் கட்டிக் கொண்டு அழுவதைப்போல அவளுக்கே தோன்றியது அப்போ இருந்த நிலை. இந்த மோகனவின் தொடர்புமட்டும் ஏற்படாதிருந்தால்...! ஒழுக்கம் ஒன்றையே முன்னிறுத்திப் பேசும் அந்த உதவாக்கரைப் பெண்ணின் கேள்விகள் அவளை தொல்லைப் படுத்திக்கொண்டே இருந்தன. அர்த்தமற்ற ஆர்ப்பாட்டங்களால் தன் மனச்சாட்சியை அடிக்கடி மூடி மறைப்பாள். ஆனால் சந்தர்ப்பம் நேரிடும்போதெல்லாம் தன் சந்தேகங்களால் அந்தத் திரையைக் கிழித்துக்கொண்டே இருந்தாள் மோகனா.

"கலைஞர்களுக்கும் ரசிகர்களுக்கும் இடையே இருக்கும் அந்தக் கொலைகாரர்கள்......அக்கா...! வாழும் வழியாகக் கலைத் துறையை வகுத்துக்கொள்ள நேரிடும்போது, வலிவற்ற வனிதைகள் இவர்களுக்கு பலியாகும் படித்தான் நேரிடுகிறது; வழுக்கி விழுந்துவிடுகிறார்கள்" என்று சொல்லி முடித்தாள் சுந்தரி.

உள்ளம் உரத்தை இழந்துவிடும்போது தன் உண்மை நிலையை அதனால் மறைத்து வைக்க முடிவதில்லை என்ற உண்மை மோகனவுக்குத் தெரிந்துதான் இருந்தது. ஆனால் இந்தப் பெண் ஏன் தன் தனி வாழ்விலும் இரண்டு பாகங்களை ஏற்று நடித்துக்கொண்டிருக்கிறாள் என்பதுதான் விளங்கவில்லை அவளுக்கு.

"அப்படியிருக்கும்போது என்னையும் ஏன் வற்புறுத்துகிறாய், சுந்தரி?" என்று பரிவாகக் கேட்டாள் மோகனா.

"உனக்கும் மற்றவர்களுக்கும் எவ்வளவோ வேற்றுமையிருக்கிறது, அக்கா. எப்படியோ நீ இதில் சிக்கிக்கொண்டாய்; இதுவே உன் பிழைப்பாக இருக்கப்போவதில்லை. விளம்பர ஆசைமட்டும் இல்லாவிட்டால் எவருமே விபரீதத்துக்கு இடங்கொடாமல் இருந்துவிடலாம்!"

இருள்மூடிய வானத்திலிருந்து எத்தனையோ நட்சத்திரங்கள் துடித்துக்கொண்டிருந்தன. உலகம் ஓய்வெடுத்துக் கொள்ளத் தொடங்கும் நேரம் அது. காரிருள் படர்ந்த அந்தச்சூழ்நிலையில் வீதியில் எரிந்துகொண்டிருந்த மின்சார விளக்குகள்கூட ஆண்டவன் சந்நிதியில் எரியும் சிறு அகல் விளக்குகளைப்போலவே ஒளிவிட்டன. மாறுபட்ட அடிப்படைகளால் வாழ்வை நிர்ணயிக்கும் அந்த இரு பெண்களின் இதயங்கள் இணைப்பைத் தளர்த்திக்கொள்ளாமலேதான் இருந்தன. அதற்குக்காரணம் அன்பா, அல்லது சுற்றிலும் சூழ்ந்திருந்த அந்தகாரமா என்பது அவர்கள் இருவருக்குமே விளங்கவில்லை.

[தொடரும்]



பொழுது போக்கு

ராதா

தாய் உள்ளம்

ஹென்றி உட்ஸ் என்பவர் எழுதிய 'ஈஸ்ட்லின்' என்ற ஆங்கிலக்கதையைத் தழுவி எடுக்கப்பட்ட 'தாயுள்ளம்' நாராயணன் கம்பெனியாரின் முதல் முயற்சி. டைரக்டர் ராம்நாத், படத்தை வெற்றிகரமானதாக்க மிகவும் சிரமப்பட்டிருக்கிறார்! ஆனால் எதிர்பார்த்த அளவு வெற்றி கிடைக்கவில்லை என்பதுதான் என் கருத்து! படம் இடைவேளை வரை 'ஓடுகிறது' என்று கூறுவதற்குப் பதில் 'நகர்ந்து செல்கிறது' என்று கூறலாம். தமிழ்ப்பட உலகில் திறமையான டைரக்டர், பொறுக்கிய நடிகர்கள், பேர்போன ஸ்டுடியோ, பிரபலமான வசன கர்த்தாக்கள் — இவ்வளவிருந்தும் படம் ஏனோ மந்தநிலையில் செல்லுகின்றது!

படத்தில் சில நம்ப முடியாத சம்பவங்கள் வருகின்றன. வசுந்தாவிடம், தன் கணவன் மனோஹர் ரகசியமாகப் பழகுகின்றான் என்ற காரணத்துக்காக, தீர யோசிக்காமலும், அதைப் பற்றித் தன் கணவனை விசாரித்தறியாமலும், பெற்றெடுத்த குழந்தையையும் விட்டுவிட்டு நிர்மலா வீட்டைவிட்டு வெளியேறிவிடுவாளா என்ற சந்தேகம் எல்லோர் மனத்திலும் எழுகின்றது! நிர்மலா மீண்டும் தன் வீட்டிற்கே வந்து தாதியாய் அமர்ந்து பணிபுரிகையில், அவளை யாருமே அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை என்பது நம்ப முடியாததாயிருக்கிறது! நாகையா பாடும் 'நாதத்தில் பேதமா' என்ற பாடல், நாகையாவின் பாட்டு ஒன்று படத்தில் இருந்துதான் தீர வேண்டும் என்ற காரணத்திற்காகப் புகுத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது!

படம் ஆரம்பித்த கொஞ்ச நேரத்தில் நாகையா மறைந்துவிடுவது, அவரின் உயரிய நடிப்பை எதிர்பார்த்தவர்களுக்குப் பெருத்த ஏமாற்றம்! மனோஹரின் நடிப்பு, 'ராஜாம்பாளை' விடப் பன்மடங்கு பண்பட்ட நடிப்பாயிருக்கிறது! நல்ல எதிர்காலம் இவருக்குக் காத்துக் கிடக்கின்றது என்பதை இப்

போதே கூறிவிடுகிறேன். தமிழ்ப் படஉலகிற்குஇன்னொரு வில்லன் கிடைத்திருக்கிறார் இப்படத்தின் மூலம். அவர் தான் சேகராக வரும் கணேசன்! சந்திரபாபுவின் உருக்கமான நடிப்பை மறக்கவே முடியாது! மாதுரியின் நடிப்பில் கவர்ச்சியும், ராஜாம்பாள் நடிப்பில் சோகமும் மிகுந்திருக்கின்றன! கே. ராமசாமி இடையிடையே தோன்றி, நகைச்சுவை டானிக்கை, நமக்கு ஊற்றிக் கொடுத்துக்கொண்டேயிருக்கிறார். படஉலகில் ராமசாமிக்கு இருக்கும் கிராக்கியைப்பார்த்தால், இனி ராமசாமி நடிக்காத படங்களே வெளிவராதுபோலிருக்கிறது. படத்தின் முடிவில்வரும் அச்சிறுவனின் நடிப்பு, அவனை நடிக்க வைத்த டைரக்டரின் திறமை இவைகளைப் புகழாமல் இருக்க முடியவில்லை. "நீயும் வேணு எங்கம்மாவைப் பார்க்க என் கூட வரியா?" என்று சிறுவன் நிர்மலாவிடம் கூறும் வார்த்தைகள் உண்மையிலேயே நம் கண்களில் நீரை வரவழைத்து விடுகின்றன.

காமிரா மிகத்திறமையாகக் கையாளப்பட்டிக்கிறது. டைரக்டர் ராம்நாக் மிக அழகான கோணங்களில் காமிராவைத் திருப்பிவிட்டிருக்கிறார். படத்தின் முடிவு சோகமாயிருக்கக்கூடாது என்ற காரணத்திற்காக, தாயும் குழந்தையும் வானுலகில் சந்திப்பதாகக் காட்டியிருக்கிறார் டைரக்டர். அச் சந்திப்பைக் காட்டியிருக்கும்விதம்—அதுதான் படத்தின் முடிவு நன்கு அமைந்திருக்கிறது.

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரு. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரு. 10-8-0 (தபால் செலவு தனி)

கர்ப்பதடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)
Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை. ரு. 12-0-0 ஜெல்லி விலை ரு. 6-8-0 (தபால் செலவு தனி)

Mfrs: SEENU & CO., Post Box, 1638, (   ) MADRAS-1.
சிங்கை 134. SERANGOON ROAD.
இலங்கை ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES. 82 MAIN ST, கொழும்பு-11.



3. பாவம், கிழவனின் பரிதாப நிலை!

அந்தக் கோரக் கிழவனின் குரூரமான கறுத்த உடல் முழுவதும் முடிச்சும், முருடுமாய்க் கிடந்தது! அவனுடைய வீங்கி வளைந்த விரல்களில் சிலுக்கச் சிலுக்க வெடித்துக்கிடந்த புண்களிலிருந்து சீழும் ரத்தமுமாய் எப்பொழுதும் வடிந்துகொண்டேயிருந்தது! பட்டாணிக் கடலைமுதல் பாவக்காய் வரையில் பலதினுசு உருவங்களில் கரளையும், திரளையுமாய்க் காய்த்துப் பழுத்துச் சொட்டை சொட்டையாய்க் கிடந்தது அவனுடைய கறுத்த முகம்! உதடுகள் தடித்துப் பருத்து வெளிறித் தொங்கின! தேனூறும் மலரைச் சுற்றி வண்டுகள் மொய்ப்பதைப்போல, சீழ் பிடித்த அக்கிழவனை வளைய வளைய வட்டமிட்டுக்கொண்டிருந்தன ஈக்கள்! பயங்கரமான பொல்லாத ரோகத்தின் விகார சொரூபியான அக்கிழவனைக் கண்ணெடுத்துக் காணவும் கண்ணும் கருத்தும் கூச்சமுற்றன! ஆயினும் வாடி வதங்கி உள்ளுக்குப் புதைந்துகிடக்கும் அக்கிழவனின் கண்களில் மட்டும் ஏசுவும், புத்தரும் காட்சிதந்தார்கள்! அவன் விழிகளில் அன்பின் ஒளி சோதிமயமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருந்தது!

அந்த ரோகிக்கிழவனின் கோரவிகாரத்தை—விகாரத்தின் பூரண பிம்பத்தைக் கண்ணாக் கண்டு மனம் சகிக்காத ஏழைத் தங்கைகள் "அய்யய்யோ!... ரோகிக் கிழவன்டீ!..." என்று அகம் சிறுத்து, முகம் கறுத்து அங்கிருந்து நாலாபுறமும் சிதறியோடிப் போனார்கள்! அவர்களின் கண்களுக்கு அக் கிழவனின் கோர உருவந்தான் தெரிந்தது. ஆனால், மனோரஞ்சிதத்திற்கு மட்டும் கிழவனின் விகாரஉருவம் தெரியவில்லை; அவன் உள்ளத்தில் ததும்பி வழியும் அன்புதான் தெரிந்தது! அவள் ஓடவில்லை; ஒளியவில்லை;

பதறவில்லை; பயப்படவில்லை; கதறவில்லை; கலங்கவில்லை; அவள் நின்ற இடத்திலேயே நிலையாகின்றாள்; கிழவனின் கண்மணிகளில் கிளுகிளுக்கும் அன்பையே ரசித்தபடி திரையில் தீட்டிய சித்திரமாய் நின்றாள். கிழவனும், பூவிழிகளால் தன்னை விழுங்கியபடி நிற்கும் மனோரஞ்சிதத்தையே விழியசையாமல் உற்றுநோக்கியபடி பாறையில் செதுக்கிய பதுமையாய் நின்றான்.



தென்றல் சிலுசிலுத்தது; அமைதி கிளுகிளுத்தது.

கிழவன், மனோரஞ்சிதத்தை நெருங்கினான்; அன்புருவான ஏசுவைப்போல் பார்த்தான்; கருணைவடிவான புத்தரைப் போல் கேட்டான்.

“செந்தமிழே, நீ யாரம்மா? எங்கிருப்பது? யாருடைய மகள்?”—கிழவனின் பேச்சில் தமிழின் இனிமை ததும்பி வழிந்தது.

“நான் குமாரலிங்கம் பிள்ளையின் மகள். இதோ...இதுதான் எங்கள் வீடு. இந்தத் தோட்டமும் எங்களுடையதுதான்...” மனோரஞ்சிதம் மாங்குயில் போல இனிமையாகப் பதில் அளித்தாள்.

சோகிக்கிழவன் சிறிது நேரம் வரை என்னவோ யோசித்தான். அதன்பின் “உன் பேரென்ன அம்மா?” என்று மறுபடியும் ஆவலுடன் கேட்டான்.

“மனோரஞ்சிதம்” என்றாள் மனோரஞ்சிதம்.

“மனோரஞ்சிதம். ம...னோ...ர...ஞ்...சி...த...ம்...”—மேகம் படர்ந்த வெண்ணிலவானத்தை நிமிர்ந்து நோக்கி முணுமுணுத்தபடியே ஏதோ சிந்தித்தான் கிழவன். என்ன சிந்தித்தானோ?...

ரஷ்ய நாட்டுத் தந்தை காரல் மார்க்ஸ் சிந்தித்தார்; ரஷ்ய நாட்டு ஏழைமக்கள் நல்வாழ்வு பெற்றனர். ரைட் சகோதரர்கள் சிந்தித்தார்கள்; ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்தார்கள். தமிழ்நாட்டுத் தெய்வம் திருவள்ளுவர் சிந்தித்தார்; வாழ்க்கைக்கு நல்வழி காட்டும் திருக்குறளைத் தந்தார். விஞ்ஞானி ஜி. டி. நாயுடு சிந்திக்கிறார்; உணவுப்பொருள்களைப் பெருக்குகிறார். அமெரிக்கநாட்டு விஞ்ஞானிகள் சிந்திக்கிறார்கள்;

இன்னும் சில காலத்திற்குள் வானவிளக்கான சந்திரனிலேயே போய்க் குடியிருக்கப் போகிறார்களாம்!

ஹூம்! இந்த ரோகிக் கிழவன் சிந்தித்து என்னத்தைச் செய்யப்போகிறான்? எதைக் கண்டுபிடிக்கப் போகிறான்?......

கிழவன் சட்டென்று திரும்பி, அன்பும் ஆச்சரியமும் படர்ந்திருந்த மனோரஞ்சிதத்தின் அழகு முகத்தை உற்றுப் பார்த்தான். என்னவோ?...மனோரஞ்சிதத்தை உச்சியிலிருந்து உள்ளங்கால்வரைக்கும் கூர்ந்துபார்த்தான். மனோரஞ்சிதத்தின் இடது கால் கட்டைவிரலும், அதன் பக்கத்து விரலும் ஒன்றோடொன்று இணைந்து ஒட்டிக்கொண்டிருப்பதைக் கண்டான்; கண்டதும் பிரமித்தான்; பிரமித்ததும் அவன் பயங்கர முகம் மலர்ந்தது! இருள் படர்ந்த அவன் உள்ளத்தில் மகிழ்ச்சிப் பிரகாரம் சுடர்விட்டு ஒளி வீசியது! அவன் சிரித்தான்! உடல் குலுங்கச் சிரித்தான்! உயிர் மயங்கச் சிரித்தான்! "மனோரஞ்சிதம்! மனோரஞ்சிதம்!" என்றுபேரானந்தத்துடன் சிரித்தான்! ஆனைப்புண்களால் அரித்துவிடப்பட்டிருக்கும் தனது இருகையாலும் தன் பாட்டைத் தலையை வருடிக்கொண்டே குலுங்கிக் குலுங்கிச் சிரித்தான்! ஏன் சிரித்தான்?...

நெஞ்சைக் கிலுகிலுக்கப் பண்ணும் கிழவனின் சிரிப்பைக் கண்ட மனோரஞ்சிதத்திற்கு ஒன்றும் புரியவில்லை. ஆம்; ஒன்றுமே புரியவில்லை! அவளுக்கு ஒரு பக்கம் அதிசயமாகவும், மறுபக்கம் அருவருப்பாகவும், இன்னொரு பக்கம் அக்கிழவனின் மீது மங்காத ஆசையும் அன்பாகவும் பிறந்து அவளைப் பாடாய்ப் படுத்திவைத்தன!

"தாத்தா, ஏன் சிரிக்கிறாய்?"—ஆச்சரியத்தின் எல்லையிலே நின்று கேட்டாள் குழந்தை மனோரஞ்சிதம்.

"மனோரஞ்சிதம்! என் உயிரான மனோரஞ்சிதம்!...எனக்கு ரொம்பவும் குதூகலமாயிருக்கிறது மனோரஞ்சிதம்! மனோரஞ்சிதம். அழகான பெயர்! ஹி ஹி ஹி..."—மறுபடியும் மறுபடியும் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தான் கிழவன். 'ஓஃகோகோ!...' என்று சிரித்தான்; ஒரே ஆனந்தக் கும்மாளமிட்டான்!



மனோரஞ்சிதம் திருகத் திருக விழித்தாள்! மறு விநாடி?—ஆஹா!



என்ன கோரம்!...ஐயோ, என்ன பரிதாபம்!

'மடேர்!' என்று ஓரடி விழுந்தது! "அய்யோ!" என்று வீறிட்டுக் கதறினாள் மனோரஞ்சிதம்! "ஆ!..." என்று அலறிக் குதித்தான் கிழவன்! தோட்டத்திலிருந்து ஓடோடியும் சென்ற மனோரஞ்சிதத்தின் தோழிகளால் அழைத்துவரப்பட்ட குமாரலிங்கம் பிள்ளை, தம் செல்லமகளுடன் கொஞ்சிக் கொண்டிருந்த ரோகிக் கிழவனின் மண்டையில் கைத்தடியால் மறுபடியும் பலமாக ஓங்கி ஓரடி கொடுத்தார், "குழந்தையை ஏமாற்றி நகையைத் திருடிப் போகவா வந்தாய்?" என்று உறுமிக்கொண்டே!

"...ம...னோ!..." உயிர் வலிக்கக் கதறிய கிழவன், அடியின் வலிதாளாமல் மறுகணமே உயிர்சோர்ந்து மண்ணிலே சாய்ந்துவிட்டான்! குமாரலிங்கம் அப்போதும் கிழவனைச் சும்மாவிடவில்லை! மீண்டும் மீண்டும் மொத்து மொத்தென்று மொத்தினார்! மனோரஞ்சிதம் "அப்பா, அடிக்காதீர்கள்! அடிக்காதீர்கள்!" என்று எவ்வளவோ கத்திக் கதறித் தடுத்தும் பலனில்லாமல்போனது தான் மிச்சம்! குமாரலிங்கம் தன் மனம்போனவாக்கில் கிழவனைக் காட்டுத்தனமாக அடித்து நொறுக்கிவிட்டு "நீ வாம்மா" என்று மூர்ச்சித்து விழப்போன மனோரஞ்சிதத்தைத் தூக்கிக் கொண்டு பங்களாவுக்கு விரைந்தார். அவர் சென்றுவிட்ட பின் மனோரஞ்சிதத்தின் தோழிகள் மூர்ச்சித்து விழுந்துகிடந்த கிழவனின்மீது கல்மாரி பொழிந்தார்கள்!

தென்றல் முகாரி கீதம் பாடியது. அமைதி ரத்தக்கண்ணீர் வடித்தது. நேரம் தேம்பிக் கொண்டே நகர்ந்தது.

கற்கள்தாம் கிடைக்கவில்லையோ? அல்லது கைதான் வலித்துவிட்டதோ?—ஏழைத் தங்கைகள் கிழவனை ஏசிப்பேசிக் கொண்டே போய்விட்ட சற்று நேரத்திற்குப் பின், கிழவன் மெல்ல நெளிந்தான். மறுபடியும் அவன் கடற்கரையில் ஒதுங்கிய பிணம்போல விறைத்துக்கொண்டான்! ஆடவில்லை; அசையவில்லை!... ஒருவேளை அவன் செத்துவிட்டானோ?

பையப் பைய இருள் கவிந்தது. கருநீல வானத்தில் ஒவ்வொரு நட்சத்திரங்களாகத் தோன்றின. வானத்தில் தோன்றியதெல்லாம் நட்சத்திரங்களாகிவிடுமா? மினுக்குவதுதான் நட்சத்திரம். மற்றதெல்லாம் சூரியனிலிருந்து தெறித்துவிழுந்த தீப்பொறிகளே! நிலா முளைத்தது. முழு நிலா! வட்ட நிலா! அழகுநிலா! வெண்ணிலா! தன்னுள் படிந்திருக்கும் கறுப்பை நீக்கிக்கொள்ளும் எண்ணமின்றி, உலகில் கவிந்திருக்கும் இருளின் கறுப்பை நீக்கத் தன்னாலான ஒளியை வாரி வீசும் சமதர்ம நிலா! தியாக நிலா! பூந்தோட்டம் மனோகரமாய் மாறிற்று.

குறுகுறுத்த தென்றல் கொஞ்சியது. அதனோடு பூமணம் குலாவியது. நல்ல நேரம்!

பிணம்போல மூர்ச்சித்து விழுந்துகிடந்த ரோகிக் கிழவன் மெல்ல மெல்ல உணர்வடைந்தான். உடலை அசைத்தான்; அப்படியும் இப்படியும் மெதுவாகப் புரண்டான்; நெடுமூச்சு விட்டான். கைகளைத் தரையில் பலமாக ஊன்றிக்கொண்டு மெல்ல எழுந்தான். தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு கம்மென்று உட்கார்ந்தான். அவன் தலையெல்லாம் காயம்! முகமெல்லாம் காயம்! உடலெல்லாம் காயம்! ஒரே ரத்தம்! ரத்தம்! ரத்தம்! அவனை ஈக்கள் மொய்த்தன. அவனைச் சுற்றிலும் ஒரே ரத்தவாடை வீசியது!

கொஞ்சநேரம் உருகிக் கரைந்தது.

கிழவன் மெல்ல எழுந்தான். குழிவிழுந்த கண்களில் கொட்டிக் கட்டிக் கட்டியாய்க் காய்ந்து கிடந்த ரத்தத்தைக் கையால் துடைத்துக்கொண்டே திரும்பினான். அமைதிசூழ்ந்த பங்களாவைப் பார்த்தான்.

"என்னை இரக்கமற்று அடித்துப்போட்ட அரக்கனின் வீடு இடிந்து நொறுங்கி நாசமாகிப் போகட்டும்!" என்று கிழவன் சாபமிட்டான்!

14-வது தந்தி!

"இங்கிலாந்திலே பக்கிங்காம்ஷயரில் ஒரு கல்யாணம் நடந்தது. மாப்பிள்ளைக்கும், மணப்பெண்ணுக்கும் மொத்தம் 13 வாழ்த்துத் தந்திகள் வந்தன. அந்த ஊர்த் தபால்காரர் மூட பக்திக்காரர். '13 என்ற எண்ணிக்கை தரித்திரமாயிற்றே!' என்று வருந்தி, ரொம்ப யோசித்த பிறகு, தானும் ஒரு வாழ்த்துத் தந்தியடித்து, மொத்தம் 14 தந்திகளாகச் சேர்த்து, மணமக்களிடம் சேர்த்தார்!

1st Prize winners of P. No. 4. (1) Y. Rudriah, Nellore (2) S. Bruce, Delhi (3) K. M. Naik, N. Kanara (4) S. S. Naicker, Tinnevelly (5) MKK. A. Jaffar, Malaya & 15 others. In addition 71 persons are awarded 3rd prize and 11, 5th Prize.

Full particulars are published in the Rainbow dated *10-3-52*

ரிஜிஸ்டர் ரெ. 277 ரூ. **25,000** பரிசு போட்டி ரெ. 6

MS Premier Bank of India Ltd-ல் *சீல்* செய்துவைக்கப் பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின்பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியானவிடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000 முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு 5-ம் பரிசு ரூ. 1000 அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும். மேற் கண்ட பரிசுகள் வருளுக்கு தருந்தபடி பகிர்ந்து கொடுக்கப்படும்.

AMBAL'S PUZZLES

KEY B. NO 4 11. TO 26=74

26	19	15	14
12	17	21	24
13	16	20	25
23	22	18	11

We hereby certify that the above is the solution in original deposited with us by Ambal's Puzzles No 4 on 9.2.52 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd

V. Ramanadan
28/3/52 Madras

முடிவு தேதி 27-3-52 விடை 12-4-52

பிரவேசக் கட்டணம் : கூபன் *1*-க்கு ரூ. *1-0-0* 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5-0-0

82

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— 13 முதல் 28 வரையுள்ள எண்களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் 82 வரும்படியாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும்.

விதிகள்:— தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டணத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தைக் கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம. மணியார்டர் செய்த ரசீதைக் கூபன்களுடன சோதது அனுப்ப வேணடும. வருளுக்குத் தருந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது: சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவதுமாகும். போட்டி முடிவு **RAINBOW** மாதமிருமுறைப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும், அல்லது 4 அணா ஸ்டாம்பு அனுப்பினால் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :—

AMBAL PUZZLE NO. 6

28 (14) Thandavaraya Gramani Street, Tondiarpet, MADRAS - 21

விசித்திரக் காதல்!

வேலைவில்லவன்

பைத்தியக்கார ஆஸ்பத்திரியின் அந்தச் சிறு கிடங்கு, வெள்ளையடிக்கப்பட்ட தன்னுடைய சுவரின் மேற்புறத்திலே அமைந்திருந்த ஒரு சிறு பலகணியின் வழியாக ஓரளவு ஒளியைப் பெற்றுக்கொண்டிருந்தது. அதனுள் ஒரு பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டிருந்த பைத்தியக்காரன் எங்களை விறைக்க விறைக்கப் பார்த்தான். ஒல்லியான உருவம்! குழிவிழுந்த கன்னங்கள்! நரைத்த தலைமயிர்!......அவன் அணிந்திருந்த ஆடை அவன் குச்சிக் கால்களுக்கும் அழுந்திப் போன மார்பிற்கும் மிகவும் பெரியதாகப் பொலபொலவென்று இருந்தது. ஒரு காலத்தில் அவன் உடல் எவ்வளவு வனப்புடன் திகழ்ந்தது என்பதை அந்த ஆடை எடுத்துக் காட்டியது. பழத்தைப் புழுக்கள் அழித்து விடுவதைப்போல அந்த மனிதனைச் சிந்தனை அழித்துவிட்டிருந்தது நன்றாகத் தெரிந்தது. அவனைப் பிடித்துக் கொண்ட பைத்தியம், அவனை அலைக்கழித்துக் கொண்டிருந்த சிந்தனை, விடாது அவன் மனதில் இருந்தபடியே சித்திரவதை செய்துகொண்டிருந்தது! அது அவன் உடலை அணு அணுவாகத் தின்றுகொண்டிருந்தது ஆம்; அந்த விசித்திரமான சிந்தனை, பைத்தியம், ஏக்கம், அவன் மாமிசத்தைத் தின்று இரத்தத்தைக் குடித்து அவன் வாழ்வைப் பாழாக்கி விட்டது!

என்ன விந்தை! அந்த மனிதன் சிந்தனையால் கொல்லப்படுகிறான். நம்மைப் பயமும் பரிதாபமும் கொள்ளச்செய்யும் உருவத்தினன் அப்பைத்தியக்காரன். நீங்காமல் அழுத்தமாக அவன் நெற்றியிலே உள்ள மடிப்புகளுக்குப் பின்னே உள்ள பயங்கரக் கனவுகள் தாம் எவை?

டாக்டர் என்னிடம் சொன்னார்: "அவன் அதிகமான அளவிலே சிந்தனையால் சித்திரவதை செய்யப்படுகிறான். அவனைப் போன்ற பைத்தியக்காரனை நான் இதுவரை பார்த்தது கிடையாது. அவனுடைய பைத்தியம் விசித்திரமானது. காதல் வயப்பட்டது. அவன் ஒரு விதமான பிரேத மனிதன்! தன் உள்ளப் போராட்டத்தை நன்றாகப் பிரதிபலித்துக் காட்டும் வகையில் அவன் ஒரு கையெழுத்துப்பிரதியை எழுதியிருக்கிறான். அதைப் படித்தால் அவனுடைய பைத்தியம் நமக்கு நன்றாகப் புரியும். நீ அதைப் படிக்க

ஆசைப்பட்டால் நான் அதைத் தருகிறேன்."

டாக்டர் தன் ஆபீஸ் அறையினுள் நுழைந்தார். நான் அவரைப் பின்தொடர்ந்தேன். அவர் அந்த விசித்திர மனிதன் எழுதிய கையெழுத்துப் பிரதியை என்னிடம் தந்தார்.

"இதைப் படித்துவிட்டு இதைப்பற்றிய உன் கருத்தைத் தெரிவி!" என்றார்.

அந்தக் கையெழுத்துப் பிரதியில் எழுதப்பட்டிருந்தது இது தான்:

"முப்பத்திரண்டாம் வயது வரை நான் காதற் புயலில் சிக்காமல் அமைதியான வாழ்வு நடத்தினேன். வாழ்க்கை எனக்கு எளிமையும் இனிமையும் கலந்ததாக இருந்தது. நான் பணக்காரனுயிருந்தேன். சில பொருட்களின் மீது எனக்கு ஆசை இருந்தது. ஆனால் எந்தப் பொருளின்மீதும் நீங்காத இச்சை எனக்கு ஏற்பட்டது கிடையாது. வாழ்க்கை எனக்கு இனித்தது. ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சியோடு படுக்கையை விட்டு எழுந்திருப்பேன்; எனக்கு விருப்பமான காரியங்களைச் செய்துவிட்டு மனநிம்மதியோடு படுக்கைக்குச் செல்வேன்.

"பழங்காலத்துத் தட்டுமுட்டுச் சாமன்களைச் சேகரிப்பதில் எனக்கு ஒரு ஆசை இருந்தது. அவைகளை ஒருகாலத்தில் தொட்டுப் பார்த்த கைகளைப் பற்றியும், அவைகளைக் கண்டு ரசித்த கண்களைப் பற்றியும், அவைகளை விரும்பிய உள்ளங்களைப் பற்றியும் நான் கற்பனை செய்து பார்த்துக்கொள்வேன். சென்ற நூற்றாண்டிலே செய்யப்பட்ட கடிகாரமொன்றை நான் மணிக்கணக்கிலே கையிலேவைத்துப் பார்த்துக்கொண்டிருந்திருக்கிறேன்! பொன்முலாம் பூசப்பட்ட மூடியினைக்கொண்ட அந்தக்கடிகாரம் பார்ப்பதற்கு மிகவும் அழகாகவிருக்கும். அதை ஒரு ஆபரணமாக உபயோகிக்க அக்காலத்தில் ஒரு பெண்மணி அதை வாங்கியநாளில் அது எங்ஙனம் மணியைக் காட்டியதோ, அங்ஙனமே தொடர்ந்து தன் செயலைச் செய்துகொண்டிருந்தது. ஒரு நூற்றாண்டுக் காலமாக அது இந்த உலகில் வேலை செய்துகொண்டிருந்தாலும் அதன் 'இயந்திர வாழ்விலே, 'இருதயக் கோளாறு' ஏதும் ஏற்படவில்லை. ஆமாம்; இருதயத் துடிப்பைப் போன்ற அந்த 'டிக்டக்' சத்தம் ஒழுங்காக ஒலித்துக்கொண்டிருந்தது. தனது சட்டைப் பையினுள் அதை வைத்துக்கொண்டு, தனது இருதயத்தோடு அதை அழுத்திக்கொண்டு, அதனைச் சுமந்த சிங்காரி யார்? அந்த அழகிய கடிகாரத்தைக் கையாண்ட இனிய கைகள்தாம் யார் கைகள்? அடிக்கொருதரம் அதைப் பார்த்து நேரத்தைத் தெரிந்துகொண்ட கண்கள்தாம் யார் கண்கள்?

"கிடைத்தற்கரிய அந்த உன்னதமான கடிகாரத்தைக் கையாண்ட ஆரணங்கைப் பார்த்து, அவள் யாரென்பதைத்



தெரிந்துகொள்ள வேண்டுமென்று நான் எவ்வளவு ஆசைப்பட்டேன் தெரியுமா? ஆனால் அவள் என்றோ இறந்துவிட்டாள்! கடந்த காலக் காரிகையர்மீது எனக்கு ஏற்பட்ட அன்பும் ஆசையும் கொஞ்ச நஞ்சமல்ல. வெகு நாட்களுக்குமுன்பு வாழ்ந்தவர்களனைவரையும் நான் நேசிக்கிறேன். கடந்த கால நிகழ்ச்சிகள் என் உள்ளத்தைச் சஞ்சலச் சேற்றில் அழுத்தி விடுகின்றன!......இளமைப் புன்சிரிப்பு, வாலிபத்தின் குதூகலம் இவை யாவும் என்றும் அழியாதவைகளாயிருக்கவேண்டும்!

“முத்தத்திற்கு வரவு கூறிய எழிலதரங்களைக் கொண்ட அழகிய, அன்புமிகுந்த, இனிமை தவழும் கடந்தகாலப்பெண்களுக்காகக் கண்விழித்து நான் அழுது புலம்பிக்கழித்த இரவுப் பொழுதுகள் எத்தனை! முத்தம் ஒரு அதரத்திலிருந்து மற்றொரு அதரத்திற்குச் செல்கிறது; ஒரு நூற்றாண்டிலிருந்து மற்றொரு நூற்றாண்டிற்குங்கூட அது செல்கிறது. மனிதர்கள் அதைக் கொடுக்கிறார்கள்; வாங்கிக்கொள்கிறார்கள். பிறகு செத்து விடுகிறார்கள். அவ்வளவுதான்.

“கடந்த காலம் என்னைத்தன்பால் இழுக்கிறது; நிகழ்காலம் என்னைப் பயமுறுத்துகிறது. காரணம் வருங்கால மரணம்! கழிந்து போய்விட்டவைகளுக்காக நான் துயரப்படுகிறேன். கடந்த காலத்தில் வாழ்ந்து இறந்துபோனவர்களுக்காக நான் கண்ணீர் வடிக்கிறேன். ஓடிக்கொண்டே இருக்கும் காலத்தை நிறுத்த நான் ஆசைப்படுகிறேன். ஆனால் அது போய்க் கொண்டே இருக்கிறது!

“கடந்தகாலப் பெண்மணிகளே, உங்களை நான் வாழ்த்துகிறேன்; காதலிக்கிறேன்!

“நான் என்னைப் பொறுத்த மட்டில் குறை ஏதும் கூறவேண்டியதில்லை. நான் வெகுநாட்களாக எதிர்பார்த்து எவள் வருகைக்காக ஏங்கிக்கொண்டிருந்தேனோ, அந்த அணங்கைக் கண்டு அவள் மூலம் அளவு கடந்த இன்பத்தை நுகர்ந்துவிட்டேன்!

“ஒரு நாள் காலை மனமகிழ்ச்சியுடன் பாரிஸ் நகரக் கடைகளில் வைக்கப்பட்டிருந்த பொருட்களைப் பார்த்துக்கொண்டே அலைந்தேன். அப்பொழுது ஒரு பெரிய கடையில், பதினேழாம் நூற்றாண்டிலே செய்யப்பட்டதொரு இத்தாலிய நாட்டு அலமாரியைக் கண்டேன். சாதாரணமாகக் கிடைக்கக் கூடிய பொருளல்ல அது. அழகாக வேறு இருந்து தொலைந்தது அது

"சில அடிகளை வைத்து நடந்த என்னை ஏன் அந்த அலமாரியின் நினைவு மீண்டும் அந்தக் கடையின்முன் நிறுத்தியதோ தெரியவில்லை! நான் அந்தக் கடையின் முன்நின்று கொண்டு அதை வெகுநேரம் பார்த்தேன். அது என்னை மயக்கி விட்டது.

"மயக்குந்தன்மை எவ்வளவு விசித்திரமானதாக இருக்கிறது! ஒரு பொருளை நாம் பார்க்கும் போது மெள்ள அது நம் மனதிலே ஆசைத்தீயை மூட்டித் தொந்தரவு தந்த பிறகு பாவையின் முகம் பருவக்காளைகளின் உள்ளத்தைக் கவர்வதைப் போலக் கவருகிறது! அதனின்றும் வெளிப்படும் அழகு நம் மனதை உலுக்க ஆரம்பித்து விடுகிறது. அதைத்தொடர்ந்து அந்தப் பொருளை வாங்க வேண்டுமென்று ஆசை மெதுவாக எழுந்து, பிறகு அது அடக்க முடியாத ஆசையாக மாறித் தொல்லை தருகிறது. அகத்தினுள் இருக்கும் ஆசை உணர்ச்சிகளை முகத்தின் மூலமாகத்தெரிந்துகொள்வதில் கை தேர்ந்தவர்களான வியாபாரிகள் சாமர்த்தியமாகத் தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்கிறார்கள்! நான் அந்தப் பீரோவை வாங்கிவிட்டேன். அதை உடனே என் வீட்டிற்கு எடுத்துச் சென்று என் அறையில் வைத்துக் கொண்டேன்.

"பொருட்களைச் சேகரிப்பவர்கள், தாங்கள் கடைசியாக வாங்கி வந்த பொருளுடன் நடந்து கொள்வதே ஒரு தனிரகம்! அதை உயிருள்ள ஒன்றாகப் பாவித்து அதைப் பார்ப்பார்கள்; தொடுவார்கள். சதா அதைப் பற்றியே எண்ணிக்கொண்டிருப்பார்கள். எங்கு போனாலும் எந்த வேலையில் ஈடுபட்டாலும் அந்தச் சிந்தனை அவர்களை விட்டகலாது. வெளியே எங்காவது சென்று அவர்கள் வீடு திரும்பியதும் முதலில் அந்தப் பொருளைத்தான் பார்க்கச்செல்வார்கள், காதலர்கள் தங்கள் காதலியரைக் காணச் செல்வதைப்போல!

"ஆம்; எட்டு நாட்களாக நான் அந்த அலமாரியுடன் அந்த முறையில்தான் நடந்துகொண்டேன். மிகுந்த மகிழ்ச்சியோடு அதைக் கையாண்டேன்.

"ஒரு நாள் மாலை, நான் அந்த அலமாரியை வழக்கம்போல அணுகியபொழுது, அதனுடைய பெட்டியறைகளுக்கு இடையேயுள்ள பலகை சற்று அகலமானதாக இருப்பதைக் கண்டேன். அதன்பின்னே ஒரு மறைவான பெட்டியறை இருக்கவேண்டுமென்று யூகித்துக்கொண்டேன். என் இருதயம் படபடவென்று அடித்துக்கொள்ள ஆரம்பித்தது அந்த மர்ம அறையைக் கண்டறிய அன்றிரவு முழுவதும் முயன்றேன், முடியாமல் போய் விட்டது.

"அடுத்த நாள், அந்த அகன்ற பலகைக்கும் ஒருபுறப் பெட்டியறைக்கும் இடையிலே இருந்த துவாரத்தின் மூலமாக ஒரு இருப்புத்துண்டைச் செலுத்தினேன். அதனுதவியால் ஒரு சிறிய பெட்டியறை வெளியே

வந்து விழுந்தது. அதனுள்ளே பட்டுத்துணியின் மீது பளபள வென்று மின்னியதோர் தலை மயிர்க்கொத்து இருந்தது! முற் காலத்தில் அது எந்தப் பெண் ணின் தலைமயிராக விளங்கி யதோ!...

"அந்த அழகிய, சிவந்த தலை மயிர்க்கொத்திலேதான் எவ் வளவு சுருள்கள்! ஒரு பொற் கயிற்றினுல் அவை கட்டப்பட் டிருந்தன.

"நான் குழப்பமடைந்து எது செய்வதென்றறியாமல் சிறிது நேரம் சிலையைப்போல நின்று கொண்டிருந்தேன். ஒரு காலத் தில் அது வாசனை எண்ணெய் களின் பூச்சுப்பொருளாக விளங்கியிருக்கவேண்டும்! ஆமாம் அந்த விசித்திரமான பிணத்தி லிருந்து இலேசான மணம் வெளிப்பட்டது!

"நான் அதை மெதுவாகப் பய பக்தியுடன் அந்தப் பெட்டி யறையிலிருந்து எடுத்து உயர்த் திப் பார்த்தேன். உடனே அது கட்டவிழ்ந்து, தரையில் தன் னுடைய சிவந்த, அலைபோன்ற



சுருள்களைக்கொண்ட உருவத்தைக் காட்டிற்று! பளபளப்புடன் அழகாகத் தோன்றிய அது ஒரு வால்நட்சத்திரத்தைப் போலக் காட்சி தந்தது.

"ஒரு புதுவிதமான உணர்வு என்னைப் பற்றிக்கொண்டது. இது யாருடைய தலைமயிராக இருந்திருக்கும்? எப்பொழுது? ஏன் இது இந்த அலமாரியில் மறைத்துவைக்கப்படவேண்டும்? இதோடு சம்பந்தப்பட்ட கதைதான் என்ன? இதை இம்மாதிரியாக வெட்டியெடுத்தது யார்? தன் காதலியைப் பிரிய நேர்ந்த காதலனா? தன் மனைவியிடம் பழி தீர்த்துக்கொள்ள விரும்பிய கணவனா? அல்லது இந்த அழகிய தலைமயிரைக் கொண்ட மங்கையின் மீது பொறாமை கொண்ட மற்றொரு மங்கையா? அல்லது இந்த ஆரணங்கு சவக்குழிக்குச் சென்றபொழுது தன்னுடைய நினைவுச்சின்னமாக இவ்வுலகில் விட்டுச்சென்ற பொருளா இது? அழகியைக் குழியில் வைத்தபொழுது அவள் காதலன் அவள் உடலின் அழியக்கூடாத ஒரே பாகமும், என்றும் அவன் காதலித்து முத்தம் தந்துகொண்டிருக்கக் கூடியதுமாகிய இந்தத் தலைமயிரை வெட்டி எடுத்துக்கொண்டானா?

"எவ்வளவு விந்தை! இந்தத் தலைமயிர்க் கொத்து, அழகியின் உடல் அழிந்தொழிந்துவிட்ட பிறகு, எத்தனை நாட்களாக இந்த ரகசியப் பெட்டியறையில் இருந்ததோ!

"அதை நான் எடுத்தேன். அது என் விரல்களில் சுருண்டு கொண்டது. அந்த ஸ்பரிசம் என்னை அழமாட்டாத குறைக்குள்ளாக்கி விட்டது!

"அதை நான் வெகுநேரம் கையில் வைத்துப்பார்த்துக் கொண்டிருந்தேன்; அதனுள்ளே இன்னும் அழகியின் உயிர் இருப்பதாக எனக்குத் தோன்றியது. மீண்டும் அதை அந்தப் பெட்டியறையினுள் வைத்துப் பூட்டிவிட்டேன். வீட்டைவிட்டு வெளியே நடந்தேன்.

"கால்கள் போனபோக்கிலே நடந்துகொண்டிருந்தேன். காதல் வயப்பட்ட ஒருவன் தனிமையில் இருக்கும் போது அவன் மனதிலே உண்டாகும் சஞ்சலம் என் உள்ளத்திலும் உண்டாயிற்று! நான் பழங்காலத்தில் வாழ்ந்த மனிதனாகவும், அந்தத் தலைமயிருக்கு உரியவளான பாவையை நன்றாகத் தெரிந்தவனாகவும் எனக்குத் தோன்றியது.

"நான் வீடு திரும்பியதும் முதலில் அந்த விசித்திரச் சொத்தைப் பார்க்கவேண்டுமென்ற புது ஆசை என் மனதிலே எழும்பியது. அப்படியே அதையெடுத்துப் பார்த்தேன். அந்த ஸ்பரிசம் என் இரத்தத்தைக் குளிரவைத்தது!

"சில நாட்கள் எப்போதும் போலக் கழிந்தன. ஆனால் அந்தத் தலைமயிர்க்கொத்தைப் பற்றிய சிந்தனை மட்டும் என்னை விட்டகலவில்லை. நான் வெளியே சென்று வீடுதிரும்பும் போதெல்

லாம் அதையெடுத்துப் பார்த்துப் பூரிப்பதுதான் என்னுடைய முதல் வேலையாகிவிட்டது. அந்த அழகிய இனிய தலைமயிரில் என்னுடைய விரல்களைப் பதிய வைப்பதில் ஒரு தனி இன்பம் ஏற்பட்டுவிட்டது எனக்கு!

"நான் அதைத்தழுவி விளையாடிவிட்டுப் பிறகு அதை அதன் இருப்பிடத்திலே வைக்கும்போது, ஏதோ உயிருள்ள ஒன்றைச் சிறைப்படுத்தி வைத்திருப்பதாக எனக்குத் தோன்றும்! அது என் கைகளில் மீண்டும் தவழவேண்டுமென்ற ஆசைஎன்னை உலுப்பித்தள்ளும்! மினுமினுப்பும் இனியஸ்பரிசமும் கொண்ட அது என் பிடிப்பிலிருந்து அகன்றதும் நான் மனத்தளர்ச்சியடைந்து வேதனைப் படுவேன்.

"இப்படியே ஓரிருமாதங்களைக் கழித்தேன். என் மனதிலே மகிழ்ச்சி இருந்தது. அதே நேரத்தில், காதலனொருவனின் மனதிலே, தன் காதலியைக் கட்டித் தழுவிக்கொள்ளவேண்டுமென்று எழும் ஆசை, மெருகேற்றப்பட்ட எண்ணம் என் மனதிலேயும் எழுந்து என்னைச் சித்திரவதை செய்துகொண்டிருந்தது!

"என் அறையின் கதவுகளை மூடிவிட்டு நான் தனிமையாக இருக்கும்போது அந்த மயிர்க்கொத்தை எடுத்து அதில் என் உதடுகளைப் புதைப்பேன். முத்தமிடுவேன். கடிப்பேன். என்முகத்திலே அதை ஒத்திக்கொள்வேன்.

"நான் அதைக் காதலித்தேன்! ஆம். நான் அதைக் காதலித்தேன். அது இல்லாமல் ஒரு கணமும் என்னால் வாழ முடியாது. அதைக் காணவிட்டால் எனக்கு ஒரு வினாடியும் நிம்மதியாகக் கழியாது!...நான் எதிர்பார்த்தேன்! ஆம். நான் எதிர்பார்த்ததுதான் அது! என்ன?...அவள்...!

"ஒருநாள் இரவு நான் தூக்கத்திலிருந்து திடீரென்று எழுந்தேன்—எழுப்பப்பட்டேன். நான் மாத்திரம் தனிமையாக என் அறையில் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை! உண்மையில் நான் மட்டும்தான் இருந்தேன். என்னால் மீண்டும் தூங்கமுடியவில்லை. தூக்கமின்மையால் வாடிக்கொண்டிருந்தேன். சிறிது நேரங் கழிந்ததும் அந்தத் தலைமயிர்க் கொத்தைக் காணச்சென்றேன். சாதாரணமாக இருப்பதைவிட அப்பொழுது சற்று இனிமையாக அது காட்சியளித்தது.

"செத்தவர்கள் மீண்டும் வரக்கூடுமா?...நான் அதை எடுத்துக் கொண்டுபோய் என் படுக்கையில் வைத்துக்கொண்டு அதற்கு முத்தம் கொடுத்தேன், ஒரு காதலன் தன் காதலிக்கு முத்தம் தருவதைப்போல!

"செத்துவிட்ட அவள் வந்தாள்! ஆம், அவள் வந்தாள்! நான் அவளைப் பார்த்தேன்; தொட்டேன்; தழுவிக்கொண்டேன்! சிவந்த அதரங்கள்! ஆப்பிள் பழங்களைப்போன்ற கன்னங்கள்! நாசுக்கான நடை!..

"ஆம். நான் அன்றிலிருந்து தினமும் இரவுப்பொழுதுகளில் அவளைக் கண்டேன்! எப்பொழுதோ செத்துவிட்ட அந்த அழகிய, முன்பின் தெரியாத விசித்திரவனிதை தினமும் இரவு நேரத்தில் வந்தாள்!

"என்னுடைய மகிழ்ச்சி, அணையை உடைத்துத்தள்ளிக் கொண்டு போகும் பெருவெள்ளமாகி விட்டது! அந்த மயிர்க்கொத்தைப் பிரிந்து வாழமுடியவில்லை என்னால். நான் எப்பொழுது எங்கு சென்றாலும் அதை என்னுடனேயே எடுத்துச் சென்றேன். ஒரு காதலன் தன் காதலியை எப்படி நாடகக் கொட்டகைக்கும் ஓட்டலுக்கும் அழைத்துச் செல்வானோ அப்படியே நானும் அதை என் மனைவியாகப் பாவித்து அதைக் கையிலேந்திக்கொண்டு பாரிஸ் நகரிலே உல்லாசமாகச் சுற்றினேன். மக்கள் பொல்லாதவர்கள்! அவர்கள் இதைப் பார்த்துவிட்டார்கள்! என்னுடைய செயல் அவர்கள் கண்களை உறுத்திவிட்டது! என்னை அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டார்கள்! என்னைச் சமுதாயத்திலிருந்து பிரித்து ஒதுக்கி வைத்துவிட்டார்கள்! அந்த மயிர்க்கொத்தை எடுத்துக் கொண்டார்கள். ஆ! ஐயோ! என் காதலியை என்னிடமிருந்து பிரித்துவிட்டார்கள்!—"

அதோடு அந்தக் கையெழுத்துப்பிரதி முடிக்கப்பட்டிருந்தது. வியப்பு மிகுதியோடு டாக்டரின் முகத்தை நான் பார்த்தேன். பயங்கரமானதொரு பேரிரைச்சல் அந்த ஆஸ்பத்திரியை அதிரவைத்தது.

"இந்த விசித்திரமான பைத்தியக்காரனை நாளைக்கு ஐந்து முறை குளிப்பாட்டவேண்டியுள்ளது. தலைமயிர்க் கொத்தின் மீது காதல் கொண்ட இந்தப் பித்தன்தான் மாஜி சார்ஜென்ட் பெர்ட்ரான்ட்!" — டாக்டர் சொன்னார்.

என் உள்ளம், வியப்பு, பயம், பரிதாபம் ஆகிய உணர்ச்சிகளால் உந்தப்பட்டது.

"அந்தத் தலைமயிர்க் கொத்து இன்னும் இருக்கிறதா?" என்று கேட்டேன் டாக்டரிடம்.

நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்த அவர் எழுந்து அருகில் ஒரு படுதாவால் மறைக்கப்பட்டிருந்த சிறு அறையினுள் நுழைந்து, ஒரு நீண்ட மயிர்க்கொத்தை எடுத்துவந்து என்னிடம் வீசினார். பொற்பறவையைப்போலக் காட்சிதந்தது அது!

அதை நான் தொட்டுப்பார்த்த பொழுது நடுக்கம் என் உடலை உலுப்பிற்று. சிறிதுநேரம் அதை விறைக்க விறைக்கப் பார்த்துக்கொண்டேயிருந்தேன்.

தனது தோளை உயர்த்திக் கொண்டே டாக்டர் தொடர்ந்து சொன்னார்: "மனித மனம் எதையும் மேற்கொள்ள வல்லது!"

[மூலம் : மாப்பஸான்]

பாணனுக்குக் கிடைத்த பரிசு

தமிழ்த்தும்பி

பாணன் பாட்டிசைப்பவன். செவ்வழி, மருதம், காஞ்சி, விளரி, பாலை முதலிய பல பண்களை இசைகூட்டுபவன். இசை மனிதத் துன்பத்தைத் துடைக்கப் பயன்படுகிறது. ஆறுதலளித்து இன்பம் சேர்க்கவல்லது. அவன் கைக்கருவி யாழ். இறால் மீனினைப் போன்ற அமைப்பைக்கொண்ட யாழை இயக்கி, பண்கள் கூட்டி, இனிய குரலில் அவன் கம்பீரமாகப் பாடத்தொடங்கி விட்டால் கேட்பவனுக்குச் சுற்றுப்புறம் மறக்கும். இன்ப இசையில் அவன் மனம் மயங்கி அமைதிபெறும். எந்தவகைஇன்னலையும் போக்கப் பாணன் இன்றியமையாதவன்.

இதைப் பழங்காலத் தலைவர்கள் (காதலர்கள்) நன்கு உணர்ந்தார்களோ, என்னவோ? அவர்களைச் சுற்றி எவனாவது ஒரு பாணன் காணப்படுவான். அதோ பாருங்கள் ஒரு தலைவன். அவன் தேன்வண்டின் இன்பம் பெறுவதற்காகத் தலைவியை மறந்து பரத்தையர் குழாமில் காட்சியளிக்கிறான். அங்கு அவர்கள் ஆசையைக் கிளப்பி விடுவதற்காகப் பாணன் காதல் பெருமையையும், தலைவன், பரத்தையர் புகழையும் பாடுகிறான். இன்பங்கலந்த மயக்கத்திலே ஒரு ஆசை வெறி. அதை இன்னும் நன்றாகத் தூண்டிவிடுகிறான் பாணன். விளைவு தலைவன், பரத்தையர் நெருக்கம் அதிகமாகிறது! பாணன் பரிசைப் பெறுகிறான்! பாணன் அரங்கை விட்டு அகல்கிறான். தலைவனும், பரத்தையும் காமஇன்பம் சுவைக்கின்றனர்.

பரத்தையர் கலவியிலே தன்னை மறந்த தலைவன் தன்னைப்பிடித்த மயக்கமும், வெறியும் பரத்தையர் இல்லில் இல்லாதபோது மறைவதை உணர்கிறான். தலைவியை நினைக்கிறான்! உருகுகின்றான்! தான் செய்த தவறையும் எண்ணுகிறான்! எப்படியாவது தலைவியின் கோபத்தைப்போக்கி அவளை அடைய உத்தேசிக்கிறான். தான் இழைத்த துரோகம் அவ்வளவு எளிதில் மன்னிக்கப்படக் கூடியதா? அவன் மனச்சாட்சியே அவனை மன்னிக்கக் கூடியதாயில்லை. அந்த நிலையில் எப்படித் தலைவியைச் சாந்தப்படுத்துவது? பாணன் தனக்கும், பரத்தைக்கும் உண்டாக்கிய மயக்கம் நினைவுக்கு வருகிறது. தன்மேல் தலைவிக்கு அமோகக் காதல் இருந்ததென்னவோ உண்மை. நடுவில் பரத்தையர்

சேர்க்கையால் காதல் இருந்த இடத்தைக் கோபம் பிடித்துக் கொண்டது. இப்போதும் உள்ளத்துள் என்னவோ அசைக்க முடியாத அன்புதான். அதைப் பொங்கச் செய்ய வல்ல வன் தனக்கும், பரத்தைக்கும் மயக்கம் தந்துவிட்ட பாணன் ஒருவனேதான்! சமாதானத் தூதனை அப்பாணனையே ஏற்பாடுசெய்து தலைவியிடம் அனுப்புகிறான் தலைவன்.

* * *

பாணன் யாழைத் தாங்கிக் கொண்டு தலைவியின் வீட்டுக்கு வருகிறான். இளம் வயதில் எவரையும் எளிதாகத் தாக்கக்கூடியதும், உணர்ச்சி ஊட்டுவதும் எது? காதல். அதைப் பற்றியே பாடத் தொடங்குகிறான் பாணன். காதலின் உயர்வும் காதலின் பெருமையும் அவன் பாட்டுப் பொருளாக அமைகின்றன. வீட்டுக்கு உள்ளிருந்து வீட்டுவாயிலுக்கு வருகிறாள் தலைவி. வந்து பாணன் இசைப்பதை உவப்போடு கேட்கிறாள். பாணனுக்கு மகிழ்ச்சி பிறக்கிறது. தன் தூதுவத் தொழில் வெற்றியின் முதற்படியைக் கண்டுவிட்டது



என்று அவன் நினைக்கிறான். அந்த வெற்றி எண்ணத்திலே மேலும் அவன் யாழை இயக்கி, வெறி ஊட்டும் பண்களைக்கூட்டு கிறான். தலைவி அசையாது கேட்கிறாள்.

தலைவனைப்பற்றிச் சொல்லத் தொடங்கினான் பாணன். அவன் இளமையைப் பற்றியும் அவன் அழகைப் பற்றியும் பாடுகிறான். தலைவி இன்னும் ஆசையோடு கேட்கிறாள்! பாணனுக்குத் தன்னம்பிக்கை இன்னும் அதிக மாகிறது. காரியத்தை வெற்றி யோடு சாதித்ததே போன்று அவன் முகத்தில் களைபிறக்கிறது. பிறகு தலைவனுடைய காதலைப் பற்றி இசைக்கிறான். தலைவி பேசாப்பதுமை போல உணர்ச்சி யைச் சிறிதும் வெளிப்படுத் தாது. அமர்ந்திருக்கிறாள். பாண னுக்குக் கொஞ்சம் அச்சம் ஏற் படுகிறது. ஏனெனில் தலைவன் காதலை இசைத்தால் தலைவி உணர்ச்சிக் களஞ்சியமாக மாறித் தன் காதல்வேகத்தை வெளியிடுவாள் எனப் பாணன் எதிர்பார்த்தான். ஆயினும் அவன் மனந்தளரவில்லை. தன் ஏமாற்றத்தைத் தெரியப்படுத் தாது தலைவன் பெருமையைப் புகழ ஆரம்பித்தான். தலைவன் புகழ்ச்சியும் தலைவியின் நிலையை மாற்றவில்லை. அவள் சிலையென உட்கார்ந்து இருந்தாள்! ஒரு வாறாகப் பாணன் தன் வேலையை முடித்தான். தலைவி சிலைநிலையி லிருந்து உயிர்நிலைக்கு வந்தாள்.

பாணன் ஆவலோடு தலைவி என்ன மொழியப்போகிறாளோ



"என்ன விசேஷம்! ரிக்ஷா ஸ்டாண்டிலே ஒரு ரிக்ஷாவைக் கூடக் காணோமே!"

எனக் காதுகொடுத்துக் கேட்கத் தன்னைத் தயார்ப்படுத்திக்கொண் டான். தலைவி சொல்லலானாள்: "என் தங்கையர் வீட்டில் உள்ள வனான பாணனே! என் வீட்டுக் கும் என் தங்கையர்—அதாவது என் தலைவனால் எனக்குப் பிறகு வரிக்கப்பட்டவர்கள்—வீட்டுக் கும் உனக்கு வித்தியாசம் தெரி யாமற் போய்விட்டது. அதனால் தான் நீ தலைவன் புகழையும் பெருமையையும் பாடினாய். என் வீட்டில் நீ இசைப்பதாயிருந்தால் தலைவன் கொடுமையும் உன் வாயினின்றும், உன் யாழினின் றும் வெளிப்பட்டிருக்கவேண் டும். ஏனென்றால் நான் தலைவன் கொடுமையையும் உணர்ந்தவளா வேன். என் தங்கையர்தான் தலைவன் இளமை, அழகு, காதல், பெருமை, புகழ் இவற்றையெல்

லாம் அறிவர்; கொடுமையை மட்டும் அறியார்! கொடுமையை இசைக்காததால் நீ என்வீட்டை என் தங்கையர் வீடாக நினைத்து விட்டிருப்பதாகத் தெரிகிறது.

“அந்திமாலை வந்துவிட்டது. இது மணவிழா தொடங்கும் நேரமாகும். காதலர்கள் தம் நாளின் இன்பப்பகுதியை மாலை நேரத்திலிருந்துதான் தொடங்குகிறார்கள். நீ பரிசு பெற்று இன்பம் பெறவேண்டுமானால் நான் சொல்லப்போவதைக் கவனமாகக் கேள், பாணனே! என் வீட்டைப் பரத்தையர் வீடு என நினைத்தாய். இந்தத் தப்பை மறுபடி செய்யாதே. அதாவது ஊரிலுள்ள வேறு எவர் வீட்டையும் என் தங்கையர் வீடென எண்ணாதே. நேராக என் தங்கையர் வீட்டுக்குப் போ. போய் இங்கு பாடின அனைத்தையும் அங்கே பாடு. என் தங்கைகள் என்னைப்போல உன்னிடம் அன்பு காட்டாது இருக்கமாட்டார்கள். அவர்கள் ஆவல் அதிகமாகும். தலைவன் புகழ் அவர்களை மயக்கும். தலைவனும் அவர்களிடம் மயங்குவான். இன்ப வெறியில் அவர்கள் உனக்குப் பெரும் பெரும் பரிசு அளிப்பார்கள். உன் பாடல் கலையையும் இசைக்கலையையும் இங்கே வீணாக்காதே, போ!”

தலைவி பாணனை வாயில் மறுக்கிறாள். அதாவது பாணன் தலைவனுக்காகப் பரிந்து பேசுவதை ஏற்பதாக இல்லை. இப்படி ஏதாவது விபரீதம் ஏற்படும் என்று பயந்துதான் தலைவன் பாணனை ஏவினான். பாணர் வேண்டியதை மட்டும் பாடி வேண்டாததை விலக்குவர். பாணனுடைய மயக்கும் இசையும் தலைவியை உருக்கி தலைவனை மன்னிக்கும்படி செய்வதாயில்லை. அப்போது தலைவி எவ்வளவு பிரிவுக்கொடுமையைச் சகித்திருக்கவேண்டும்? உண்மையில் அவள் தலைவனை மறுக்கிறாளா? இல்லை. பின் ஏன் பாணனை இப்படி விரட்டுகிறாள்? பாணனை விரட்டினால் தலைவன் தன் துரோகத்தை நன்றாக உணர்ந்து நேராகத் தலைவியிடம் மன்னிப்புக்கோர வருவான். தலைவன் பிரிவில் அவன் தீக்குணங்கள் தலைவிக்கு நினைவுவரும்; வந்தால் எல்லாவற்றையும் கேட்பதாக முடிவு கட்டுவாள். ஆனால் தலைவனை நேரில் கண்டால் அவன் அன்பு தவிர மற்றெல்லாம் மறந்துவிடும். அப்புறம்...? மகிழ்ச்சி, மகிழ்ச்சி, மகிழ்ச்சி.

எங்கையரிலுள்ளானே
பாண! நீ பிறர்
மங்கையரிலென்று மயங்கினாய்
—மங்கையரி
லென்னா திறவா திவணின்னி
[கந்தேகல்
பின்னாரி லந்தி முடிவு.

—திணைமாலை நூற்றைம்பது.

[இறவாது—தப்புச் செய்யாது, இவண் இன்றைந்து—இவ்விடத்திருந்து நீங்கி; எங்கையர்—தங்கையர் பின்னார்—என் பின்னவரான பரத்தையர்]

மாறுதல்

கு. அழகிரிசாமி

2

ஏறக்குறைய ஒரு மாதமாகி விட்டது. அன்றிரவில் நடந்த நிகழ்ச்சிகள் இரண்டொரு நாட்கள்தான் வேகம் குன்றாமல் என் மனதை வருத்திக்கொண்டிருந்தன. அப்புறம் சிறிது சிறிதாக அந்த நினைவு என் உள்ளத்தைவிட்டு அகன்று விட்டது. என்னுடைய நித்திய க்டமைகளில் நான் வழக்கம் போல ஒன்றிப்போய் விட்டேன்.

என் மயிலாப்பூர் நண்பர் தம் குடும்பத்தோடு ஒரு ஞாயிற்றுக் கிழமையன்று என் வீட்டுக்கு வந்திருந்தார். அவரோடு தனியாக உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தபோது, அந்தச் செய்தியை விரிவாகச் சொன்னேன். முதலில் என்னைக் கேலி பண்ணப் போகிறவர்போல, சிரிப்பும் வேடிக்கையுமாக நான் சொல்வதைக் கேட்டுக் கொண்டு வந்தார். நான் என் பேச்சை முடிக்கும் போது அவர் முகத்திலும் பச்சாதாபம் பிரதிபலித்தது.

"வறுமையின் கொடுமை எப்படி இருக்கிறது என்று பாருங்கள். அந்தப் பெண் துஷ்ட மிருகத்தைப் பார்த்து நடுங்குவதுபோல, இந்த விபசாரத் தொழிலை நினைக்கும்போதெல்லாம் நடுங்குகிறாள். பெரியம்மாள் வெளிப்பாவனைக்காகத் தான் வந்தவனை உபசரித்துப் பேசுகிறாளே தவிர உள்ளுக்குள் அவள் படும் வேதனை தெளிவாக நமக்குத் தெரிகிறது. அவளைப் பார்த்தால் கௌரவமாகப் பிழைத்தவள் போலவே தோன்றுகிறது. கௌரவம் மட்டுமல்ல, மிகமிக நல்லவளாகவும் அடுத்தவர்களுக்கு உபகாரம் செய்யும் மனம் படைத்தவளாகவும் அவள் வாழ்ந்திருக்க வேண்டும். அவள் முகத்தில் அந்தச் சிரிய பண்புகள் இப்பொழுதும் தென்படுகின்றன. இந்த ஈனப் பிழைப்பு இன்னும் அந்த ஒளிரேகைகளைப் பரிபூரணமாக அழித்து விடவில்லை......நினைத்தாலும் எனக்குக் கண்ணிர் வருகிறது......"

"இதில் நாம் இரண்டு பேர் அனுதாபப்பட்டு என்ன ஆய்விடப் போகிறது? அந்த மாதிரி ஒரு குடும்பமா, ஆயிரக் கணக்கான குடும்பங்கள் விபசாரத்தை நம்பித்தான் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கின்றன" என்றார் நண்பர்.

"ஆனால், இதைப் போன்ற பரிதாபத்தை எங்கும் பார்க்க முடியாது. விடசார விடுதிகளில், அற்பத்தனமும், சில்லறைத் தனமான மெருகும், அதற்கேற்ற நடவடிக்கைகளும் தான் மேலோங்கி இருக்குமே ஒழிய, இதைப் போன்ற துயரத்தை அங்கே பார்க்க முடியாது. நான்

நேருக்குநேர் நின்று பார்த்த தனால், என்னையும் துயரம் பற்றிக் கொண்டது."

"தொழிலுக்குப் புதியவர்களாக இருப்பார்கள். இன்று வரைப் பேணிப் பாதுகாத்த பெருமைகளும், சீலங்களும், தர்மங்களும், வந்து போராடும். அப்போதெல்லாம் இந்தத் துயர நாடகத்தை எதிர்பார்க்கவேண்டியதுதானே? ஆனால், இதெல்லாம் எத்தனை நாட்களுக்கு? ஒரு மாதமோ இரண்டுமாதமோ கடந்துவிட்டால், எல்லாம் நடைமுறைப் பழக்கமாகி அவர்கள் உள்ளமும் மரத்துப் போய், உயிரோ உணர்ச்சியோ இல்லாமல் தானே செத்துவிடும். அந்தச் சமயத்தில் போய் அவர்கள் முன்னிலையில் நாம் அனுதாபப்பட்டால், நம்மைப் பேடிப் பயல் என்று இதே பெண்கள் தான் கேலி செய்து அவமானப் படுத்தி விரட்டுவார்கள்!" என்று நண்பர் கூறினர்.

அப்புறம் சிறிது நேரம் இதே விஷயத்தைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்.

சாப்பாட்டுக்குப் பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம் எல்லோரும் சினிமாவுக்கு போனோம்.

★

இரண்டாவது முறையாகவும், கடைசிமுறையாகவும் அந்த வீட்டுக்கு ஒருநாள் மாலையில் போனேன். மனதில் கிடந்து அவ்வப்போது என்னை வருத்தி வந்த நினைவை, இரண்டாவது சந்திப்பில் கழித்துவிட்டு வந்துவிடலாம் என்றுகூட எனக்குத் தோன்றியது; அத்துடன் மற்றொருமுறை போய்ப் பார்க்க வேண்டுமென்று காரணமில்லாத ஒரு விசித்திரமான ஆவல் பிறந்தது. போனேன். முதல் சந்திப்புக்கும் இதற்கும் நடுவில் இரண்டு மாதமாவது கழிந்திருக்கும்.

மாலை நேரம். பழக்கமானவன் காமுகனாகப் பழக்கமாகாமல் உபகாரியாக அறிமுகமானவன். என் கண்ணீரால் அவர்கள் கண்ணீருக்கு மதிப்பும் மனிதத் தன்மையும் தந்தவன். இந்த மாதிரியான காரணங்களால் அவர்கள் உறவினனைப்போல என்னைக் கருதுவார்கள் என்று நினைத்தேன். ஆனால் என்னைக் கூர்ந்து பார்த்து இன்னாரென்று கண்டுகொண்டதும், "நீங்கள் ஏன் இங்கே வருகிறீர்கள்? நாங்கள் பண்ணுகிற பாவத்தை விடப் பெரிய பாவம் உங்களை எங்கள் வீட்டில் வரவேற்பது; போய்விடுங்கள்" என்ற கருத்தில்



தான் என்னென்னவோ சொல்லி என்னை வழியனுப்ப முயன்றாள் பெரியம்மாள்.



ஆனால் நான் உடனே வந்துவிடவில்லை; உட்கார்ந்து பேசினேன். அவர்களுடைய வரலாற்றையெல்லாம் கேட்டறிந்தேன். அரைமணி நேரத்தில் நான் புறப்பட்டுவிட்டேன். போகும்போது, இதுவே என் கடைசிச் சந்திப்பு என்பதாக ஏதாவது செய்யலாம் என்று "பணம் ஏதேனும் வேண்டியிருக்குமா?" என்றுகேட்டேன்.

பெரியம்மாள் கைகளைக் கூப்பிக்கொண்டு "பணம் எதற்கு? நீங்கள் எதற்காக ஐயா கொடுக்கிறீர்கள்? நாங்கள் ஏழைகளாக, பிச்சைக்காரர்களாக, மனித ஜன்மங்களாக இருந்தால் உங்கள் உபகாரத்தை நாடலாம். நாங்கள் விபசாரம் செய்துபிழைக்கிறோம். விபசாரிக்கு நன்கொடை கொடுப்பானேன்? நீங்கள்போங்கள். இனிமேல் உங்கள் கால்கள் இந்தப் பாவிகளின் வீட்டில் படவேண்டாம்" என்று அவசரப்பட்டாள்.

கொஞ்சம் தாமதித்தாலும், அவளும் தலை குனிந்துகொண்டு நிற்கும் மகளும் அழுது விடுவார்கள்போலிருந்தது.

புறப்பட்டு வந்துவிட்டேன்.

வரும் வழியில் மயிலாப்பூரில் என் நண்பர் வீட்டுக்குச் சென்றேன்.

"ஏது இப்படித் திடீரென்று முன்பின் தகவல் இல்லாமல்? ஏதாவது விசேஷம் உண்டா?" என்று திகைப்போடு கேட்டார் நண்பர்.

நான் சொன்ன பதில் அவரை அதிகமாகத் திகைக்க வைத்துவிட்டது.

"அந்த வீட்டுக்குத்தான் போய்விட்டு வருகிறேன்!"

"எந்த வீடு?"

"அன்றொரு நாள் உங்களிடம் சொல்லவில்லையா, தாயும் மகளும்..."

"நீங்கள் செய்யும் காரியம் எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை. நம்மால் அவர்களுக்கு ஏதாவது செய்யமுடிந்தால் செய்யவேண்டும். இல்லையென்றால் பேசாமல் நம் வேலையைக் கவனிக்கவேண்டும். வீணாக அனுதாபம் காட்டப்போனால் கடைசியில் அபவாதந்தான் நமக்கு மிஞ்சும். நாம் பெண்டு பிள்ளைகளோடு குடும்பம் நடத்துகிறவர்கள். இப்படிப்பட்ட விவகாரங்கள் குடும்பத்துக்கு ஆகாதவை."

"இனிமேல் நான் அங்கு போகப் போவதில்லை. இன்று தான் கடைசிச் சந்திப்பு. அவர்களுக்குக் கொஞ்சம் பணம் கொடுக்கலாம் என்று பார்த்தேன், வேண்டாம் என்று சொல்லிவிட்டாள் பெரியம்மாள்" என்றேன்.

"நீங்கள் இவ்வளவு பெரிய பைத்தியம் என்று நான் நினைக்கவில்லை. உண்மையில் இது பைத்தியக்காரத்தனமே ஒழிய தர்ம கைங்கரியமல்ல. அன்ன சத்திரம் கட்டிப் பசிக்கொடுமையை ஒழிக்க முயலுவதும், பூமிதானம் செய்து விவசாய சமூகத்திற்குச் சுபிட்சம் தர முயலுவதும், பிச்சைக்காரப்பையனைத் 'தம்பி! ராஜா!' என்று அன்போடு அழைத்துப் பிச்சைபோடுவதும் எப்படிப்பட்ட பைத்தியக்காரத்தனங்களோ, அவைபோன்ற பைத்தியக்காரத்தனமே இதுவும். பார்க்கப்போனால் இது முட்டாள்தனமான கண்துடைப்பு வேலை என்று கூடச் சொல்லுவேன். தனி மனிதனுடைய உதவியைக் கொண்டு சமூகத்தை வாழ்விக்க முடியுமா? ஒரு விபசாரிக்குப் பணம் கொடுத்துவிட்டால், ஊரில் விபசாரம் அற்றுப்போய் விடுமா? இன்றைய சமூக அஸ்திவாரத்தை அடியோடு பெயர்த்து விட்டுப் புதிய அஸ்திவாரம் போட்டாலொழிய, இந்தப்பிரச்சினைகள் தீரும் என்று நினைக்கிறீர்கள்...?"

நண்பர் மேடைப் பிரசங்கம் போல ஆவேசமாகப் பேசிக் கொண்டேபோனார். அவருடைய பேச்சை ஓரிடத்தில் எதையோ சொல்லி நிறுத்தினேன். அவர் கேட்டார்: "அவர்கள் ஏதேனும் வேலைசெய்து பிழைக்க முயற்சி செய்யக்கூடாதா?"

"அவர்கள் வேலை செய்து பிழைக்கத்தான் இந்த ஊருக்கு வந்தார்கள். அவர்கள் பிறந்ததே அதற்காகத்தான். ஆனால் வேலை கிடைத்தால்தானே? நம் அரசாங்கம் வேலைகொடுக்கும் கடமையை ஏற்றுக்கொள்ளவில்லையே! பிரஜைகள் விஷயத்தில் ஆயிரம் அனுவசியக் கடமைகளை வைத்துக்கொண்டு எடுத்ததற்கெல்லாம் குறுக்கிடுவதைத் தவிர, இந்த அரசாங்கம் வேறு எதைச் சாதித்திருக்கிறது? அந்தப் பெரியம்மாளும், பெண்ணும் அநேக நாட்களாக வேலை தேடியலைந்திருக்கிறார்கள். நாட்கணக்காக முழுப் பட்டினியும் கிடந்திருக்கிறார்கள். சில தினங்களில் பிச்சை எடுக்கவேண்டுமென்று கூட நினைத்தார்களாம். கடைசியாக முழுப்பட்டினி கிடந்த ஒரு நாளிலேயே இந்த விபசாரத் தொழிலைத் தொடங்கினார்களாம்..."

"அவர்களுக்கு உற்றார் உறவினர்...?"

"ஒருவரும் கிடையாது. அப்படி யாராவது இருந்தாலும், அவர்களால் உதவியில்லை. கிராமத்தில் பிழைப்புக்கு வழியின்றி பட்டணத்துக்கு வந்துவிட்டார்கள். சரீரத்தை அடகு வைத்து, மானத்தை விற்றுப் பிழைக்கும் இந்தப் பிழைப்பைத்தொடங்கிச் சில நாட்கள்தான் ஆகின்றன.

நான் போயிருந்த அன்றைய தினத்துக்கு ஒரு வாரத்துக்கு முன்தான் இந்தப் புது வாழ்க்கையைத் தொடங்கியிருக்கிறார்கள். நான் போய் வந்ததற்கப்புறம் சில தினங்களில் பெரியம்மாள் இந்த முதிர்ந்த வயதிலும் ஒருநாள் கூலிவேலைக்குப் போனாளாம். தாயும் மகளுமே ஐந்தாறு நாட்கள் வேலை பார்த்திருக்கிறார்கள். அப்பொழுது அவர்கள் இந்த ஈனத்தொழிலை நிறுத்தி விட்டார்கள். ஆனால் அவர்களுடைய துரதிர்ஷ்டமோ என்னவோ, பழையபடியும் வேலை கிடைக்காமல்போகவே, வயிற்றைக் கழுவப் பழைய நாகத்திலேயே திரும்பவும் குதிக்கும்படியாகிவிட்டது. இதில் பரிதாபகரமான ஒரு விஷயமென்னவென்றால், அந்தப் பையனுக்கு இந்த விபரங்கள் எவையும் தெரியாது. தெரிந்தாலாவது ஆட்களைக் கூட்டிக் கொண்டு வரச் சாத்தியப்படும். அவனிடத்தில் சொல்லியனுப்பத் தாயாருக்கு வெட்கம். "பொய் சொல்லாதே, திருடாதே, ஆபாசமாகப் பேசாதே' என்றெல்லாம் சொல்லி வளர்த்த என் குழந்தையிடம் எப்படி இந்தச் சமாசாரத்தைச் சொல்லி ஆட்களைக் கூட்டிவரச் சொல்லுவேன், ஐயா" என்று சொல்லி அந்தப் பெரியம்மாள் தலையிலடித்துக்கொண்டு அழுதாள். என் நெஞ்சம் வெடித்துவிடும் போல இருந்தது. உத்தமப் பெண்களின் இயற்கைக்கதைகளில் படித்த கற்பரசிகளின் ஒழுக்கம்-இவையெல்லாம் மனித உருக்கொண்டதுபோல அந்த அம்மாள் விளங்குகிறாள். தன் அறியாப்பருவத்தில் தாயை இழந்த ஒருவன் இந்த அம்மாளைக் கண்டால், தன்னைப் பெற்றெடுத்த அன்னை இவளைப் போலத்தான் இருந்திருப்பாள், இவளைப்போலத்தான் இருக்க வேண்டும் என்றுகூட ஆசைப்படத் தோன்றும்......"

"போதும், இந்தத் துயரக் கதையை என்னால் கேட்க முடியவில்லை" என்று எழுந்து போய் விட்டார் நண்பர்.

அப்புறம் சிறிது நேரந்தான் அங்கிருந்தேன். நேரமும் ஆகி விட்டது. மனைவி பசியோடு காத்திருப்பாள் என்று நண்பரிடம் விடைபெற்றுக்கொண்டு வீடு திரும்பினேன்.

★

மேற்கண்ட அத்தியாயங்களில் கூறிய செய்திகள் நிகழ்ந்து ஐந்து ஆண்டுகள் கழிந்துவிட்டன. நான் கோயமுத்தூருக்கு மாற்றுதலாகிப் போய் அங்கே நான்கு வருஷங்களுக்கு மேலேயே வேலை பார்த்துவிட்டு, பழையபடியும் சென்னைக்கு மாற்றுதலாகி வந்து இரண்டு மாதங்களாகிவிட்டன. என் வாழ்க்கையில், இந்த ஒரு மாறுதலும், எனக்கு இரண்டு குழந்தைகள் பிறந்ததும் தவிர வேறு குறிப்பிடத்தக்க மாறுதல் எதுவும் நிகழவில்லை. ஆனால் தேசத்தில் பெரிய பெரிய மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன.



ஒரு நாள் எனக்குத் தெரியவந்தது. 'பாவம்' என்று சமூகம் ஒதுக்கி வைத்திருப்பது, எப்படி நம் தலைவாசல் வரையிலும் படர்ந்து பரவிவிட்டது என்று நான் திடுக்கிட்டேன்.

நான் கோவைக்குப் போன மறு வருஷத்தில் இந்தியா சுதந்திரம் பெற்றது. பக்கத்திலுள்ள நாடுகள் பலவும் சுதந்திரம் பெற்றன. இந்தியா சுதந்திரமடைந்த வருஷத்தில் எனக்குப் பிறந்த பெண் குழந்தைக்கு 'சுந்தரி' என்று பெயர் வைத்திருந்தும், பிரியமாகச் 'சுதந்தரி' என்று நானும் என் மனைவியும் அழைத்து வந்தோம்.

இந்தியாவுக்கு வடக்கேயுள்ள சீனாவிலும் ஒரு புதிய அரசாங்கம் ஏற்பட்டுவிட்டது. இப்படி எத்தனை எத்தனையோ மாறுதல்கள். தேசங்களில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் மனித வாழ்க்கையிலும் ஏற்படவேண்டுமல்லவா? ஏற்படத்தான் செய்தன......

நான் சென்னைக்கு இரண்டாவது தடவையாக வந்து குடியேறிய தெருவில் இரண்டு குடும்பங்கள் வேறு வழியின்றி விபசாரத்தை நம்பியே ஜீவனம் செய்துவந்தன என்ற விபரம் இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டதும் எனக்கு அந்த அம்மாளும் அவளுடைய மகளும்தான் நினைவுக்கு வந்தனர். வெகு காலத்துக்குப் பிறகு வந்த நினைவு இது. ஒரு கணம் அவர்களைப் பற்றி யோசித்தேன். உலகத்தில் இந்த ஐந்து வருஷ காலத்தில் ஏற்பட்ட மாறுதல்களில் ஏதேனும் ஒன்று அவர்களுக்கு நல்வாழ்க்கையைத் தந்திருக்கக்கூடும் என்று எண்ணி அவர்களை மறக்க முயன்றேன்.

நம் நாடு சுதந்திரம் பெற்று நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்தியாவின் பெருமை உலகின் கண்முன் மிகவும் உயர்ந்திருக்கிறது என்றெல்லாம் பெரிய மனிதர்கள் அடிக்கடி சொல்லுகிறார்கள். நம் சுதந்திர அரசாங்கம் பெருமைப்படத்தக்க காரியங்களைச் சாதித்திருக்கிறது என்னும் பாராட்டுக்களையும் பத்திரிகைகளில் படிக்கிறேன். இந்தக் காரியங்களால் அவர்

களும் அவர்களைப்போன்ற ஏழைகளும் நன்மை பெற்றிருக்கக்கூடும் எனக் கருதினேன்.

சீனதேசத்தில்கூடப் புதிய அரசாங்கம் ஏற்பட்டு இரண்டு வருஷகாலத்துக்குள் பசி பட்டினியை ஒழித்துவிட்டார்கள் என்று நம் சீன ஸ்தானீகர் உலகறியக் கூறினர். சீனவுக்குச் சென்ற காந்திபக்தர் ஒருவர் இரண்டு வருஷ ஆட்சியில் கான்டன் போன்ற ஒரு பெரிய நகரத்தில் ஒரு விபசாரவிடுதிகூட இல்லாதபடி ஒழித்து, எல்லாப் பெண்களுக்கும் வேலை கொடுத்து மீட்சி தந்திருக்கிறார்கள் என்று தம் பத்திரிகையில் எழுதியிருக்கிறார். இந்த உலக மாறுதல்களில் அவர்கள் மாறாமல் தப்பமுடியாது என்று எண்ணி அவர்கள் நினைவை மனதைவிட்டு அகற்றினேன்.

ஒருநாள் மாலை என் பழைய மயிலாப்பூர் நண்பருடனேயே திருவல்லிக்கேணி கடற்கரைக்குப் போயிருந்தேன். அங்கே ஒரு தேர்தல் பிரசாரக்கூட்டம் நடந்துகொண்டிருந்தது. பிரசங்க வாசகங்களைக்கொண்டு எந்தக் கட்சியாரின் கூட்டமென்று ஊகித்துவிட்டோம். அவர்களுடைய வாய்வீச்சைக் கேட்டுக்கொண்டிருக்க எனக்கோ என் நண்பருக்கோ பிடிக்கவில்லை. எழுந்து தூரத்தில் போய் உட்கார்ந்து குடும்ப சமாச்சாரங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். இரவு எட்டு மணியானதும் வீட்டுக்குப் போவதற்காக, மணலைத் தட்டிவிட்டு எழுந்தோம். கடற்கரை மணலைத்தாண்டி, சாலையை நெருங்கும் சமயத்தில், வலது புறம் சிறிதுதூரம் தள்ளிக் கூட்டம் குறைந்துள்ள ஓரிடத்தில் நான் கண்ட காட்சி என்னை அந்த இடத்திலேயே நிறுத்திவிட்டது. பிரமித்துப் போய்த் திரும்பிப் பார்த்துக்கொண்டு அசையாமல் நின்றேன். என்னைப் பார்த்து என் நண்பரும் நின்றார்.

“என்ன? ஏன் நிற்கிறீர்கள் ?” என்று கேட்டார்.

“கொஞ்சம் இருங்கள்,” என்று சொல்லிவிட்டு, கொஞ்சம் கூர்ந்து பார்த்தேன். அதன் பிறகு, அந்தத் திசையை நோக்கி என் நண்பரையும் அழைத்துச் சென்றேன். அங்கே அந்த அம்மாளும், மகளும் நின்றுகொண்டிருந்தார்கள். எவனே ஒரு அல்காப் பேர்வழி அங்கே விற்கும் பட்டாணிக் கடலையையும், மாங்காய்த் துண்டுகளையும் வாங்கிக்கொண்டு போய் அவர்களுக்குக் கொடுத்தான்.

நான் கண்ட காட்சி என்னைப் பயத்துக்கு ஆளாக்கிவிட்டது. என் நற்கனவுகளெல்லாம் சிதைந்துபோய்விட்டன. நண்பரை அழைத்துக்கொண்டு, ‘விறு விறு’ என்று கடற்கரைச் சாலையைத்தாண்டிப் பஸ் ஸ்டாண்டை நோக்கி வந்தேன்.



"என் தம்பி, இப்ப மயிலே மாடு என்ன வேளைக்கு அரைப்படி கறக்குமா?"

"ஆமாங்க, அவ்வளவு தான்."

"பின்னே குடும்ப சவரட்சனை யெல்லாம் எப்படி நடத்துறே?"

"என்னங்க செய்யுறது? என்னமோ படாதபாடு பட்டுவர்ரேன். இப்ப மாடுகள் கொடுக்கிற பாலை மட்டும் நம்பியிருந்தா எங்க வயித்திலே மண்ணுதான்!"

என் ஆசைக்கனவுகள் இப்படியும் ஆகவேண்டுமா எனத் தவித்தேன். அவர்கள் வாழ்க்கையில் மாறுதல் ஏற்படும், உலகின் கண்முன் மேலோங்கி நிற்கின்ற சுதந்திர இந்தியாவில் வாழும் அவர்கள் வாழ்க்கையில், மாறுதல் ஏற்பட்டிருக்கத்தான் வேண்டும் என்று நான் நினைத்தேன். ஆனால் நடந்தது என்ன? நான் எதிர்பாராத சில மாறுதல்கள் தான் ஏற்பட்டிருந்தன.

அந்தப் பெண்ணின் முகம் முன்போல இல்லாமல், இப்போது பேயைப்போலக் கோரமாக இருந்தது. மேக நோய் பிடித்த உடம்பு என்பது ஒரு நிமிஷப் பார்வையிலேயே தெள்ளத்தெளிவாகத் தெரிந்தது. நெற்றியில் காலணு அகல நீலப் பொட்டு காதிலும், மூக்கிலும் பீங்கான்கல் பதித்த பித்தளை நகைகள். புருவங்கள் கறுப்புக் கோடுகளைப்போலச் சிதைத்து விடப்பட்டிருந்தன. இந்த ஒரு விஷயத்தில் தாய்க்கும் மகளுக்கும் வித்தியாசம். மற்றப்படி, அந்த அம்மாளும் காலணு அகல நீலப்பொட்டு வைத்திருந்தாள். மகளைப்போலக் கொண்டையில் ஒரு கூடைப் பூவை வைத்துக்கொண்டிருந்தாள். கையில் பித்தளைக் காப்புகள் காதிலும், மூக்கிலும் பீங்கான் கல் பதித்த பித்தளை நகைகள்...

அந்தச் சிறுவனை மட்டும் காணவில்லை. ஒருவேளை அவன் வீட்டில் இருக்கலாம்; இல்லை என்றால் செத்துப்போயிருக்கலாம்; அதுவும் இல்லையென்றால் கிரிமினல் குற்றம் செய்து சிறைக்கூடத்துக்குப் போயிருக்கலாம். ஆம்; இப்படிப்பட்ட பயங்கரமான வாழ்க்கையின் மத்தியில் வளர்ந்திருந்தால், அவன் மட்டும் என்ன, பெரிய மகான்களும், துறவிகளும், அவதார புருஷர்களும்கூட கிரிமினல் குற்றம் செய்து சிறைக்குப் போயிருந்தாலும் எனக்கு ஆச்சரியம் உண்டாகாது.

நினைவு நிழல்

ஏடெடுத்துப் பேனாவைப் பிடித்தேன் எழுத.

'இறக்கவேண்டுமாயின் எழுதப் பேனாவை எடு!'

புதுமைப்பித்தன் சிரித்தார்.

கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தேன். அமரரின் நகைமுகம் கோலம் மாறவில்லை. அந்த மாறாத மயக்கப் புன்னகையிலே பேனாவிற்குத் தன்னைப் பலியிட்டுக்கொண்ட தியாகப் பண்பு உதிர்ந்துகொண்டிருந்தது. விரைவிலேயே தன் முடிவுக்குத் தீர்ப்பு எழுதிவைத்துவிட்டுத்தான் சொ. வி. பேனாவை எடுத்தாரோ? நீக்கமற்ற கனவுலகத்திலே சஞ்சரிக்க ஏன்தான் அத்தனை அவசரமோ?

புதுமைப்பித்தன் மறைந்து மூன்று ஆண்டுகளைக் கடந்து அவருக்கு நினைவு மலர் தொடுக்கப்பட்டிருக்கிறது. புதுமைப்பித்தனை, அவரது உள்ளத்தை, எழுத்துக்களை அனைவரும் அறிந்துகொள்ள நல்ல சந்தர்ப்பத்தைத் தந்திருக்கிறார் நண்பர் நா. சு. ராமசாமி, ஏனைய பிரபல எழுத்தாளர்களின் உதவியை அடித்தளமாகக் கொண்டு.

'என் கணவர் புதுமைப்பித்தன்' என்ற அவர் தம் துணைவியார் தீட்டியிருக்கும் கட்டுரை கண்கலங்கி அழவைக்கின்றது. 'ஆனால் என்னதான் உண்மையாக உழைத்தும் அவருடைய உழைப்பிற்கும் மதிப்பிற்கும் தகுந்த பலன் இல்லாமல் போய்விட்டது' என்று கூறும்படியாக நேர்ந்துவிட்ட அவர்களின் துயரைத் துடைப்பது தமிழ்நாட்டின் கடமை.

இம்மலரில் கிடைக்கும் வருவாய் சொ. வி. யின் குடும்பத்தைச் சேர்கிறது என்பது பெருமைப்படவேண்டியது. ஆனால் புதுமைப்பித்தனது மனைவி கமலாவும், குழந்தை தினகரியும் ஒரு எழுத்தாளனின் குடும்பம் என்ற நிலையிலே நிற்கவைத்துவிடாமல் தமிழ்நாட்டின் இலக்கிய மன்னர் அமரர் புதுமைப்பித்தனது குடும்பம் என்று பெருமையுடன் பெருமிதத்துடன் கம்பீரமாகச் சொல்லத்தக்க நிலையிலே நிதி திரட்டி, அவரது குடும்பத்தை உயர் நிலைக்குக் கொணரவேண்டியது மிக மிக அவசியம்—அவசரமுங்கூட. இதுவே நம் கடமை. தமிழ் இலக்கியத்திற்கு அவர் செய்துள்ள கடமைக்கு இது ஒன்றே நம் கடமையின் எடுத்துக்காட்டு.

புதுமைப்பித்தன் நினைவு மலர்: பதிப்பாசிரியர்: நா. சு. ராமசாமி, சுந்தர விலாஸ், ராமவர்மபுரம், நாகர்கோவில். விலை ரூ. 1—8—0.

வளரும் இலக்கியம்

யார், கப்பலோட்டிய தமிழரா?

வ. உ. சி. யின் இன்பநினை வின் நிழலினூடே தமிழ் நாடறிந்த எழுத்தாளர்கள் பலர் அவரைப்பற்றிய புதுப்புதுக் குறிப்புக்களைச் சரமாரியாகப் பொழிந்து தள்ளினார்கள். இந்த அழகான அறிமுகத்துக்குக் கால் கொடுத்தது பம்பாய்த் தமிழ்ச் சங்கம் என்றறிந்ததும் வியந்தேன். கப்பலோட்டிய தமிழனுக்கு ஓர் நினைவு மலர் வெளியிட்டிருப்பது குறித்து அவர்களைப் பாராட்டினேன்.

வ. உ. சிதம்பரம்பிள்ளை மலர்: பம்பாய்த் தமிழ்ச்சங்கம், மாதுங்கா. விலை ரூ 1—4—0.

'கடலில் நடந்தது!'

'எது?'

பதில் இல்லை. ஆனால் கார்க்கியை அழைத்துக்கொண்டு நம் நண்பர் வந்தார். கார்க்கியுடன் வல்லிக்கண்ணனா?

'கப்பலில் நடந்தது.'

நையாண்டி செய்யவில்லை அவர். 'கப்பலில் நடந்தது' புத்தகம் அவர் கையிலிருந்தது.

'அழகும் உணர்வும், இனிமையும் உயிர்ப்பும், கலை நயமும் காம்பீர்யமும் நிறைந்த கார்க்கியின் எழுத்துக்கள்இவை. பெப்பி கதையைப் படித்ததுமே இதை நீங்கள் உணரமுடியும்.'

உண்மை. பெப்பியின்குழந்தை உள்ளம் 'எக்ஸ்ரே' எடுக்கப்பட்டிருக்கிறது. மனதை ஒரு நிலைப் படுத்தி—அதாவது பொறுமையுடன் படிக்க முயன்றால் பிற கதைகளையும் ரசிக்கலாம். ரஷ்ய மேதையின் கதைகளைத் தமிழில் வல்லிக்கண்ணன் தருகிறார் என்றால், நடை அழகுக்குக் கேட்கவா வேண்டும்?

கடலில் நடந்தது: மூலம்: மாக்ஸிம் கார்க்கி. தமிழில்: வல்லிக்கண்ணன். வெண்புறா வெளியீடு, சென்னை-5 விலை ரூ 0–8–0.

'உள்ளே வரலாமோ?'

'பேஷாக'

'நான் தங்கவேலர். நற்பணியாளர்கள் என்ற புத்தகத்தின் ஆசிரியர்.'

'நூல் பரவாயில்லை. காரல் மார்க்ஸ், லெனின் இவர்களைப் பற்றித்தான் நிறையப்பேர் நிறையச் சொல்லிவிட்டார்களே. கொஞ்சம் அதிகமான முயற்சி எடுத்திருந்தால் நீங்கள் இவர்களைப்பற்றி இதுவரை தெரியாத கருத்துக்களையும் வெளியிட்டிருக்கலாமே.மாலட்டோவ், ஹோ வரலாறு சுவைக்கத் தக்கவைதான். புது விளக்கங்கள்; போற்றுகிறேன்.'

'நன்றி!'

'வணக்கம்'

நற்பணியாளர்கள்: ஆசிரியர்: மா. தங்கவேலர். ஆராய்ச்சி நிலையம். சென்னை–2 விலை 0-8-0

'அண்ணா, அண்ணா'

தங்கைகள் மனோன்மணி, விசாலம், சரோஜா, அன்னம் எல்லோரும் போட்டி போட்டுக்கொண்டு மேஜையை மொய்த்து விட்டார்கள். பார்த்தால் ஆளுக்கொரு குழந்தைப் புத்தகமாக ஒவ்வொருவரிடமும் இருந்தது.

'மூடத்தனத்தையும் போலித் தனத்தையும் ஒழித்துக்கட்ட நல்ல கதை காளி கோவில்!'

'சாதி ஒழியவேண்டும் என்பதை ரொம்பஅழகாகச்சொல்லு கிறது காசிராஜன் கதை.'

'மாஸ்டர் கோபாலனின் ஸ்டண்ட் வேலைகள் ஷோக்காக இருக்கின்றன.'

'மலைத் திருடனை மறக்கவே முடியாது!'

இப்படி ஆளுக்கொரு விமரி சனம் செய்தார்கள்.

அவர்களின் ரசிகத்தன் மையில், விமரிசக உள்ளத்தில் நானும் பங்குகொண்டேன். குழந்தைகட்கு நிறையப் புத் தகங்கள் எழுதி அவர்களுக்கு நெடுநாளாக அறிமுகமான தோழர் நாச்சியப்பனின் சிறுவர் கதைகளிலே புரட்சியும் புதுமை யும் பொதிந்திருக்கின்றன. ராஜ னும் நன்கு எழுதியுள்ளார்.

காளிகோயில், காசிராஜன், மாஸ் டர் கோபாலன்: ஆசிரியர்: நாரா. நாச்சியப்பன். மலைத் திருடன்: ஆசிரியர்: ராஜன். செந்தமிழ்ப் பதிப்பகம், புதுக்கோட்டை. விலை ஒவ்வொன்றும் ரூ. 0–3–0.

'பைத்தியக்காரி'

கொண்ட கணவன் கட்டிய மனைவியைப் புரிந்துகொள்ள முடியாது, சந்தேகம் விளையாடும் சர்வசாதாரணமான இக்கதை யிலே இடைக்காதலும் இல்லா மல் போகவில்லை. நடையின் வேகத்திற்குக் கற்பனைக் குதிரை யையும் அல்லவா 'காலப்'பில் சுண்டிவிட்டிருக்க வேண்டும்?

பைத்தியக்காரி: எழுதியது: சுப. இளங்கோன். கலையகம் வெளி யீடு, சென்னை 1. விலை ரூ 0–6–0

'ஆனேனு, ஆக்கப்பட்டேனு?' நல்ல கேள்வி இது. பைத்தியக் காரியின் அதே அச்சுத்தான் இந்தக் கதையும். சமூகச் சீர் திருத்தத் தொண்டு இது என் கிறார் இதன் ஆசிரியர். வருந்து கிறேன். கதையில் சாருமதியின் வாதமும் சோமசுந்தரத்தின் எதிர்க்கேள்விகளும் இயற்கைக் குப் புறம்பானவை. 'சப்'பென் றிருக்கிறது கதை.

'ஆனேனு, ஆக்கப்பட்டேனு?' ஆசிரியர்: 'ஆரென்கே', தமிழ்க் கலைக்கழகம், சென்னை–21 விலை ரூ 0—8—0

அன்றொருநாள் தோழர் ஆசைத்தம்பியின் இதயம் பேசிக் கொண்டிருந்தது கோகலே மண்டபத்திலே. திராவிட முன் னேற்றக் கழகத்தின்விரிவை விவ ரித்தார். கம்பரையும் இளங் கோவையும் எடைபோட்டார். கோயில், கடவுள் சர்ச்சைகளும் நடந்தன அமோகமாக. உணர்ச் சிப் பெருக்கத்தின் இடையே தோழரின் கிண்டல் பேச்சுக் கள்தாம் கூட்டத்தில் அதிகச் சலசலப்பை உண்டாக்கிவிட் டன. அதுவே மக்கள் சக்தி!

மக்கள்சக்தி: ஆக்கம்: ஆசைத் தம்பி. கலை இல்லம், சென்னை–5. விலை ரூ 0—6—0

—பூவை

இதயம்



நா. பாண்டுரங்கன்

பச்சை மயில் வானவீதியில் பறந்துசெல்லும் கம்பீரத்துடன் பூசி மெழுகியிருந்த சிமெண்ட் வீதியில் ஓசைப்படாமல் மிதந்து ஓடிக்கொண்டிருந்த புத்தம் புதிய 'ப்யூக்' தன் சங்கீதக் குரலை இடையிடையே கிளப்பி உதிர்த்துக்கொண்டு புகைவண்டி நிலையத்தின் வாசலில் வந்து நின்றது. காரின் கதவைத் திறந்துகொண்டு ஜோராக இறங்கி நின்றான் 'லெக்சரர்' திரு. சந்திரசேகரன் எம். ஏ. விரிந்த வெண் தாமரை மொட்டிலிருந்து பறந்து வெளிவந்து கொண்டிருக்கும் பொன் வண்டைப் பார்க்கும் அவ்வளவு ஆர்வத்துடன் அங்கிருந்த எவ்வளவோ பேருடைய கண்கள் அவன் மீது திரும்பி ஆர்வத்துடன் நோக்கின. அரும்பிய புன்னகையுடன் பரபரவென்று நிலையத்திற்குள் நடந்து சென்று, 'வண்டிகள் வரும் கால அட்டவணையை' தன் வயிற்றில் கட்டிக்கொண்டு நிற்கும் சுவரின்முன்னே நின்று அவன், தன் கழுத்தை வளைத்து அதையே ஒரு வினாடி கண்கொட்டாமல் பார்த்தான். உடனே தன் மணிக்கட்டிலிருந்த சின்னஞ் சிறு தங்கக் கடிகாரத்தை அரை வினாடி தன் காதோடு வைத்துப் பார்த்துவிட்டுக் கண்ணுக்கு எதிரே கொண்டுவந்து உற்று நோக்கினான். பிரபு வீட்டுக் குமாரி தான் வரம் வாங்கிப் பெற்ற ஒரே செல்வக்குழந்

தையை உடம்பு காய்கிறதோ என்று அதன் மார்பைத் தொட்டுப் பார்த்துவிட்டுக் கவலையோடு அதன் முகத்தைக் கூர்ந்து நோக்குவதைப்போல் இருந்தது அவன் தன் 'ரிஸ்ட்வாட்ச்சை' உற்று நோக்கியது. மெயில் வருவதற்கு இன்னும் ஒருமணி பத்து நிமிஷம் இருந்தது! அலைகள் கொந்தளித்துக்கொண்டிருந்த அவன் மகிழ்ச்சிக்கடல் அப்படியே உறைந்து பனிக்கட்டித் திடலாக மாறியது. ஐயோ அப்பா, இன்னும் எழுபது நிமிஷங்களை எப்படிக் கழிப்பது! ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு ஜன்மமேதான்.

அவனுடைய மனம் வரப்போகிற மெயிலை எண்ணி ஓடியது. 'மெயில்!' அதிலேதான் அவன் மயில் வந்துகொண்டிருக்கிறாள். அந்த மயிலை நினைத்ததுமே அவன் இதயத்தில் குயில் கூவியது. அந்த இசை மயக்கத்தில் மூடிய அவன் இமைகள் நொடிப்போது அசையாமல் நின்றன.

வண்டி நிற்கிறது. அதிலிருந்து சிரித்துக்கொண்டே அவன் மனைவி திருமதி. மாலதி பி. எஸ்ஸி. இறங்குகிறாள். "வெகு நேரமாக இங்கே வந்து காத்திருக்கிறீர்களோ?" என்று ஆசையோடு கேட்டுக்கொண்டே அவள் வேகமாக அவனை நோக்கி நடக்கிறாள். ஆனால்—ஆனால், அவன் முகத்தில் மலர்ந்து நிறைந்திருக்கும் மலர்ச்சியின் விரிந்த இதழ்கள் மளமளவென்று எழுந்து நின்று ஒன்று சேர்ந்து ஒட்டிக்கொண்டு மீண்டும் ஒரு மொட்டாகின்றன. அவன் பதில் சொல்லுகிறான்.

"இல்லை—நான் இங்கே வந்து கணப்போதுதான் ஆகிறது."

"அதற்கு முன்பு என்ன அப்படிப்பட்ட வேலை?"

"ஒரு வேலையும் இல்லை; சும்மா உட்கார்ந்துதான் இருந்தேன்."

அவள் முகம் சுருங்கியது. வருத்தம் தோய்ந்த குரலில் பேசினாள்.

"உண்மையில் அன்பு செலுத்துபவர்கள் தங்கள் அன்பர்கள் வருகையை எதிர்பார்த்துக் காலம் கருதாமல் காத்திருப்பார்கள்......"

"என்னால் அது முடியவில்லை, மாலதி. ஏனென்றால் உன் நினைவே என்னிடம் எழவில்லை. மேலும் அந்த இடத்தை விட்டு இப்போதுதான் என்னால் வெளியேற முடிந்தது."

"அப்படியானால் நீங்கள் பங்களாவிலிருந்து வரவில்லையா?



பின்னே எங்கிருந்து வருகிறீர்கள்?''

"மாளிகையிலிருந்து!''

"எந்த மாளிகையிலிருந்து?''

"மாலதி, உன் மன மாளிகையிலிருந்து இப்போதுதான் நான் வெளியே வரமுடிந்தது. அதுவும் உன்னை எதிர்கொண்டு வரவேற்கும் சங்கடத்திற்காகத்தான்!''

இமைகளைத் திறந்து அவன் எதிரே பார்த்தான். மூடிய கண்களுக்கு முன்னே மலர்ந்திருந்த நிகழ்ச்சிச் சித்திரம், திறந்த கண்களுக்கு முன்னே எப்படியோ நினைவுச் சித்திரமாகி மறைந்தது. பிளாட்பாரத்தில் அலைமோதிக்கொண்டிருந்த ஜன சந்தடியில் கணப்போது அவன் நினைவு வந்து நிலைத்தது. வண்டியில் ஏற இருப்பவர்கள்—அப்படி ஏறுபவர் களுக்கு விடையும், இறங்குபவர்களுக்கு வரவும் கூற இருப்பவர்கள் — இவர்களிடம் அலைந்து வியாபாரத்தை விரிப்பவர்கள் இந்த எல்லாவற்றையும் பார்ப்பதே வேலையாகத் திரிபவர்கள், இவர்கள்தாம் இங்கே மண்டிக்கிடக்கிறார்கள். அவர்களிடத்தில்தான் எவ்வளவு வேறுபாடு கொம்மாளத்தால் தாக்கப்பட்டோர் சிரிக்கிறார்கள், இங்கு மங்கும் அலைகிறார்கள்!—கொந்தளிப்பில் தேக்கப்பட்டோர் சிந்திக்கிறார்கள், சிலையாகக் குந்தியிருக்கிறார்கள். இந்த மனிதர்களில் தான் எந்தப் பிரிவைச் சேர்ந்தவன் என்று எண்ணுவதற்குள் அவன் கண்களைவேறொரு காட்சி இழுத்து அணைத்தது.

வானத்தில் உதிர்ந்துகிடந்தன நட்சத்திரங்கள். உதித்துக் கொண்டிருந்த மஞ்சள் நிறச் சந்திரன் தூரத்துச் சவுக்கு மரங்களுக்கிடையே காணப்பட்டான். அன்று மாலதி இது போன்ற ஒருகாட்சியைப் பங்களாவின் மாடியிலிருக்கும்போது பார்த்துவிட்டுச் சொன்னது அவன் நினைவில் மலர்ந்தது. "நிலவும் நட்சத்திரங்களும் அல்ல அவை! கதிரவன் ஆகாயத்திலிருந்து நழுவிக் கடலில் குதித்துவிட்டான். அப்படிக் குதித்த வேகத்தில் கடலிலிருந்து முத்துக்களும் இரத்தினங்களும் வானத்தில் தெறித்துச் சிதறிவிட்டிருக்கின்றன!'' இப்படி மாலதி சொன்னதைக் கேட்டதும் அவன் முறுவல் பூத்துக்கொண்டே அவளைப் பார்த்துச் சொன்னான்.

"அப்படித் தெறித்துச் சிதறியவை எல்லாம் வானத்திலேயா தங்கிவிட்டன?''

"ஆமாம்.''

"இல்லை மாலதி, இல்லை! ஒரே ஒரு நட்சத்திரம் மட்டும் வானத்தில் நில்லாமல் பூமியில் வந்து விழுந்துவிட்டது. அது எங்கே இருக்கிறது தெரியுமா, இப்போது?''

"ஓ! தெரியுமே.''

"சொல், பார்க்கலாம்.''

"உங்கள் எதிரில் நின்றுகொண்டு இப்போது பேசுகிறது! இன்னொன்று சொல்ல மறந்துவிட்டேனே. இந்த நட்சத்திரம்

விழுதற்கு முன்பே ஓர் இரத்தின மும் பூமிக்கு நழுவிவிட்டது."

அவள் சிரித்துக் கொண்டே பேசி நிறுத்தினாள்.

"மாலதி! அந்த இரத்தினம் இப்போது எங்கே இருக்கிறது தெரியுமா?"

"சொல்லுங்கள், பார்க்க லாம்."

"அந்த நட்சத்திரத்துடன் தான் அந்த இரத்தினம் இப் போது பேசுகிறது. இல்லையா?"

"ஆமாம்!"

இருவருமே விழுந்து விழுந்து சிரிக்கவில்லை. அதற்குள் நட்சத் திரத்தின் வாயை இரத்தினத் தின் வாய் மூடியது—பேசியல்ல, தன்னையே அதன் மேல் வீசி!

எவ்வளவு நேரம் அவன் அப் படியே பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்திருப்பானோ தெரி யாது. சிறுவயதில் அவன் ஒரு கிண்ணத்தில் சோப்புக் கரைத்த நீரைக் கொஞ்சம் வைத்து வைக் கோல் குழாயை வாயில் பிடித் துக்கொண்டு அதில் வைத்து ஊதுவான். படபடவென்று எண்ணமுடியாத பலவர்ணக் குமிழிகள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொண்டு கிளம்பி அந்தக் கிண்ணம் நிறைந்து வழி யும்; கூத்தாடுவான் அதைப் பார்த்து. அது அவனுக்கு நினைவில் வந்தது. அதுபோலவே இப்போது மாலதியைப் பற்றிய நினைவுக்காற்றைச் செலுத்திய தும் அவன் மனக் கிண்ணத்தில் மகிழ்வின் விதவிதமான வண்ணக் குமிழிகள் பெருகி வழிகின்றன. அதைப் பார்த்துக் கூத்தாடுகிறது நெஞ்சம்.

கடகடவென்று சக்கரங்கள் உருளும் சத்தத்துடன் போர்ட் டர், 'ஓரம்—ஓரம்' என்று கத்திக் கொண்டு வண்டியைத் தள்ளிக் கொண்டு வந்தது அவன் காதில் விழுந்தது. விலகி நின்றான். சுழன்றுகொண்டிருந்த அவன் சிந்தனைச்சக்கரம் நின்றது. மெயில் வரும் வரையில் நேரத் தைப் போக்குவது எப்படி என்று அவன் மனம் எரிச் சலுடன் நினைத்தது. பிரகாச மான விளக்கொளியில் மூழ்கி நனைந்து ஒளிசொட்டிக் கொண் டிருந்த கண்கவர் 'புத்தக ஸ்டால்' அவன் பார்வையில் பட்டது. எம்போரியத்தில் ஜார் ஜெட் சேலைகளை விரித்துப் போட்டதும் ஆர்வத்துடன் அவைகளைச் சுற்றிக் கவிந்து கொள்ளுகிற உயர்வர்க்கத்துப் பெண்களைப் போல, அந்தப் புத்தகக் கடையைச் சுற்றிக் கூட்டம் கவிந்து கிடந்தது. அவன் கால்கள் அதை நோக்கி அடிபெடுத்து வைத்தன. படுக்கை அறையில் வைக்க வேண்டிய படங்களையெல்லாம் பளபளப்பாக்கிமேலட்டையாகப் போட்ட மட்டரகப் புத்தகங்கள் தாம் முதல் சலுகையுடன் அங்கே ஏராளமாகப் பரப்பி வைக்கப்பட்டிருக்கும் என்ற எண்ணம் அவன் கருத்தில் அடி யெடுத்து வைத்தது. தன்னாலே புலன்களில் எழக்கூடிய உணர் வைத் துட்டுகளை எண்ணிக் கொடுத்துவிட்டு அந்தப்புத்தகம்

களின் உதவியால் பெறத்துடிக்கும் தெம்பிழந்த அந்தப் புத்திசாலிகளை நினைத்ததும் அவன் இதழ்களில் புன்னகை பூத்தது. மாதப் பத்திரிகை ஒன்றும் தனிப்புத்தகமாயிருந்த ஷேக்ஸ்பியரின் 'நடுக்கோடை நள்ளிரவுக்கனவு' ஒன்றும் வாங்கிக்கொண்டு வந்து, உள்விளக்கைப் போட்டுக் கொண்டு அவன் காரின் உள்ளேயே உட்கார்ந்தான். புத்தகத்தைப் பார்த்தான்—புரட்டினான்—படிக்கவும் முயன்றான். ஆனால், விளையாட்டில் அமிழ்ந்து போயிருக்கும் பிள்ளை அன்னை கொடுக்கும் பால் கெண்டியில் ஒரு வாய் குடித்ததும் அதை விலக்கிவிட்டு ஓடுவது போல, அவன் மனம் இப்போது படிப்பை விட்டு விலகி ஓடியது. மாலதியின் கடிதம் வந்து சேர்ந்த பிறகு காலையிலிருந்து நிகழ்ந்த மற்ற எல்லா விஷயங்களிலுமே அவன் மனம் இப்படித்தான் பதியவில்லை. அந்தக் கடிதம்—காலையில் வந்திருந்த தபால்களைப் புரட்டிக் கொண்டிருக்கும் போது அவன் ஆச்சரியம் கிச்சிட்டுக்கத்தியது. கடிதத்தைப் பிரித்துப் படித்ததும் அந்த ஆச்சரியம் ஆனந்தமாக உருவெடுத்தது. அந்தக் கடிதத்தை நினைத்ததும் இன்ப நினைவுகள் குமிழியிட்டன.

இன்ப நினைவுகள் என்பவை பழமரத்தில் அடர்ந்திருக்கும் பச்சைக்கிளிகளை ஒத்தவையல்லவா! சத்தமிட்டுக்கொண்டு இரண்டு கிளிகள் கிளம்பினால் போதும். சாசரவென்று எல்லாக் கிளிகளும் தொடர்ந்து வெளியே பறக்குமே! மாலதியின் கடிதத்திலிருந்த வாக்கியங்கள் அவன் நினைவுகளில் எழுந்து அபிநயம் பிடித்தன.

"......நல்ல முறையில் புத்தகம் வெளியிடுபவர் யாராவது இருந்தால் உடனே சொல்லி வையுங்கள். அவருக்கு அதிர்ஷ்டம் அடித்திருக்கிறது. காவியம் முடிந்துவிட்டது! வெளியிடும் உரிமை மட்டும்தான் அவருக்கு. பதிப்பிக்கும் உரிமை எனக்கு. ஆசிரியாகும் உரிமை உங்களுக்கு!

"காவியத்தின் பெயர் 'பிரிவில் உதிர்ந்த மலர்கள்!'"


"இந்த இருபது நாட்களில் நான் ஓர் உருவகம் கண்டுபிடித்திருக்கிறேன். எப்படி என்று ஆச்சரியமாகக் கேட்பீர்கள். எல்லாம், இங்கே நான் வந்தது முதல் நீங்கள் எனக்கு எழுதிச் சேர்த்த கடிதங்களைப்படித்தால்தான்! கடிதங்களா அவை? இல்லை-அழகிய காவியங்கள் அல்லவா அவை! உங்கள் கடை



சிக் கடிதத்தைப் படித்துக் கொண்டே வந்தேன்......

"மாலதி! நம்மைப் பிரித்து வைத்திருக்கும் இந்தத் திரை! இது என்ன பாடுபடுத்துகிறது!! துணிபாலான திரையாக இருந்தால் கத்தியாலெதற்கு, கையாலேயே கிழித்துக் கசக்கி நசுக்கிப் பஞ்சாக்கி ஊதிவிடுவேன். ஆனால், இது அறுபது மைல் தூரம் மண்ணாலாகியிருப்பதை எண்ணிக் கண்ணைச் சிமிட்டி என்னைப் பார்த்து நகைக்கிறது. பாவம், இந்தத் தூரத் திரையைக் கிழித்துப் பஞ்சாக்க எவ்வளவு நேரம் பிடிக்கும்? சின்னஞ்சிறு அட்டையாலான, ரயில்வே டிக்கட்—அது போதுமே!...... ஆனால், மாலதி! சேர்ந்துவாழும் ஆனந்தம் இந்தப் பிரிவு மண்ணில் புதைந்து மறைந்து போய்விட்டதே; அதை உணரும் போது......'

"இப்படி நீங்கள் எழுதியிருந்ததை நான் படித்துக்கொண்டு வரும்போது எப்படியோ என்னிடத்தில் அந்த உருவகம் உருவானது. இதுதான் அது: பிரிவு என்பது மண்! சேர்ந்துவாழும் ஆனந்தவிதை அதில் புதைந்து மறைந்து போகிறது. அப்படி மறைந்துபோனாலென்ன; போகட்டுமே. அதுகூட அவசியபதான். ஏனென்றால், விதையை நெஞ்சிலேயே எப்போதும் அணைததுப் பாதுகாத்-



தால் உடற் சூட்டால் விதையின் உயிர் கருக் கெட்டுவிடுமே! விதையை மண்ணில் புதைத்து மறைப்பது எதற்கு? விதையிலிருந்து செடி வெடிக்கும், வெடிக்கும் செடியிலிருந்து கிளைகள் படர்ந்து அவைகளில் இலைகள் அடர்ந்து காற்றில் துடிக்கும், அதைப் பார்த்து மறைந்திருக்கும் மொட்டுக்கள் சிரிக்கும், அந்தச் சிரிப்பிலிருந்து நறுமண முத்துக்கள் உதிரும்! இதுதான் என் உருவகம். என் உருவகத்தின் உண்மையை நான் உங்களிடம் நேரில் வந்த பிறகுதான் நீங்கள் மட்டுமல்ல, நானும உணரப்போகிறேன். இன்றைய மெயிலில் அதற்காகவே நான் அப்பாவுடன் புறப்பட்டு வரப் போகிறேன். இந்த ரயிலுக்குச் சக்கரம்தான் இருக்கிறது. இறக்கைகள் இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்?......''

அவனுக்கு இருப்புக்கொள்ளவில்லை. காரைவிட்டு இறங்கி நடந்து மீண்டும் பிளாட்பாரதில் வந்துநின்றான். கணகணவென்று ஸ்டேஷன்மாஸ்டர் அறையில் டெலிபோன் மணி ஒலித்தது. திரும்பிப் பார்த்தான். தன்னுடைய மனத்தில் ஆனந்தம்தான் அப்படி ஒலித்துக் கூப்பிடுகிறது என்று நினைத்தான். ஆர்வத்துடன் கவனித்தான். 'என்போன்றகவிஞனுக்கு ஏற்ற மனைவிதான் இவள். இநத இரண்டு வருஷங்களுக்கு முன்பு இவள் எங்கே இருந்தாள்? இதே உலகில்தான் இருந்திருக்கிறாள்! அப்போது யாராவது என்னிடம் வந்து 'மாலதி என்று ஒரு பெண் மாண்டுபோனாள்' என்று சொல்லியிருந்தால், என் மனநிலை எப்படியிருக்கும்? இமயத்தின் சிகரங்களில் ஏறும்போது யாரோ ஒருவன் வழுக்கிவிழுந்து உடைந்து நொறுங்கிப்போனான் என்பதைக் குமரி முனையில் நீராடும் எவனோ ஒருவனிடம் சொன்னால் அவன் என்ன நினைத்திருப்பான்? அதைத்தான் என் மனம் நினைத்திருக்கும். இங்கிருந்து அவள் தாய்வீடு போனதும் மூன்றுநாள் கழித்து ஒரு கடிதத்தில் அன்று எழுதியிருந்தாளே, 'இரண்டுநாள் தலைவலி எனக்கு டாக்டர் வந்த பிறகுதான் தீர்ந்தது!' என்று.

'அவள் எழுதியிருந்ததைப் படித்ததும்மேலே படிக்க முடியாமல் என் மனம் எப்படித் துடித்தது! குமரிமுனையில் மனைவிக்குத் தாகம் எடுத்தால் இமயத்தில் இருக்கும் அவள் கணவனுக்கு விக்கல் எடுப்பதுபோல் ஆகிறது என் நிலை. மேலே அவள் என்ன எழுதியிருந்தாள்...' 'இந்தத் தலைவலிக்குக் காரணம் என்ன? ஊரைவிட்டு வந்து இரண்டுநாள் கழிந்துவிட்டதே — மூன்றுவது நாள் தொடங்கிவிட்டதே என்று உங்களை நினைத்தேன், உடனே தலைவலி வந்துவிட்டது. உங்கள் நிலையைப்பற்றி எனக்கு ஏதும் தெரியவில்லை. அதனால்தான்! எதிரே உடனே பார்த்தேன். ஆச்சரியமாகப் போய்விட்டது, எனக்குத் தலைவலி என்பது அவனுக்கு எப்படித் தெரியும்? அவன் டாக்டரை அழைத்து

வந்துகொண்டிருந்தான். யார் அவன் என்று கேட்கிறீர்களா? அவன்தான், தபால்காரன்! டாக்டர் யார் என்று கேட்கிறீர்களா? உங்களிடமிருந்து எனக்கு வந்த அந்தக் கடிதம்தான்!'

—இதை நினைத்ததும் மகிழ்ச்சியால் அவன் இதயம் புல்லரித்தது. தூய்மையான அன்பிற்கு எடுத்துக்காட்டு இதைவிட வேறென்ன வேண்டும்?

உடனே அவன் மனம் இன்னொன்றை நோக்கி ஓடியது. அவன் கல்லூரியில் சொல்லிக் கொடுப்பது ஆங்கிலம்தான். ஆனால் தமிழில்தான் எழுதி அந்தக் கவிதைத்தொகுதியை வெளியிட்டிருந்தான். அதன் பெயர் "தூய்மையான காதல்!" மணிமேகலையின் நிழலாகத் தானே உருவெடுத்து அவள் நடந்தஇடமெல்லாம் தொடர்ந்து உருகி உயிர்விட்ட உதய குமாரன்—கோவலன் கொலையுண்டான் என்றதைக் கேட்டதும் உடனே துறவறம் பூண்ட கலைச்செல்வி மாதவி—அம்பிகாபதி குத்துண்டு வீழ்ந்ததும் அங்கேயே மயங்கிச் செத்த அமராவதி......தூய்மையான காதலுக்கு உலகில் எடுத்துக்காட்டு ஒன்று இரண்டா? அவன் அடிக்கடி மாலதியிடம் சொல்லும் அந்தக் கருத்து—"இரண்டு இதயங்கள் ஒன்றில் ஒன்று சேர்ந்து கரைந்து கலந்து முற்றும் வேறொருபொருளாய் மாறிவிடுகின்றன. இந்தப்பொருளின் பெயர் தான்தூய்மையான காதல். இது இரசாயன மாறுதல்!

பொன்னி வெளியீடு-5

கம்பன் கெடுத்த காவியம்

எழுதியவர் : மு. அண்ணாமலை

*

விலை அணா 4

*

வணிகர்கட்குக் கழிவு தரப்படும். முன்பணம் அனுப்புவோர்க்கும் ரூ. 5-க்கு மேற்பட்டு வாங்குபவர்கட்கும் அனுப்பும் செலவு இலவசம். வி. பி. செலவு தனி. தனிப்பிரதி வேண்டுவோர் ஐந்தணா தபால்தலை அனுப்பவேண்டும்.

*

பொன்னி லிமிடெட் – சென்னை-21

மாலதி, இதுதான் நம்மிடையே நிகழ்ந்திருக்கிறது." அடிக்கடி அவன் இதைச் சொல்லும்போது பெருமிதமடைவான்.

கடிகாரத்தைப் பார்த்தான். அப்பப்பா, காலையில் மாலதியின் கடிதம் வந்த பிறகு—இதற்கு முன்பு மலையிலிருந்து இறங்கும் ஆற்றைப்போல் ஓடிக்கொண்டிருந்த கடிகாரத்தின் நிமிஷமுள் கடிதத்தைப் படித்த பிறகு சமவெளியில் நடக்கும் ஆற்றைப் போல் ஓடுவதை அவன் உணர்ந்தான்.

கல்லூரியில் அன்று வழக்கம் போலவே அவன் பாடம் சொல்லத்தொடங்கினான். முன்பெல்லாம் பாடம் சொல்லத் தொடங்கியதும் நேரம் அவனுக்கு,

நியனைக்கச் செல்லும் மனிதனைப்போல் ஓடும். இப்போதோ அது திருமண ஊர்வலத்தில் செல்லும் மனிதனைப்போல் நடக்கத் தொடங்கியது.

போர்ட்டர் மணியடித்தான். அவன் மணிக்கட்டிலிருந்த கடிகாரத்தை ஒருமுறை துச்சமாகப் பார்த்தான். 'இன்னும் சற்றுநேரமாகட்டும். மாலதி வரட்டும். மணிமுள்ளே! உன்னை விநாடிமுள்ளாய்ப் போகும்படிச் சபிக்காவிட்டால் என் பெயரை மாற்றிக் கூப்பிடு!' என்று அவன் சொல்வதுபோல் இருந்தது அந்தப் பார்வை. கொஞ்சநேரம் சென்றது. ஒளிப் புகையால் இருட் புகையைக் கிழித்துக்கொண்டு வெகுதூரத்தில் வண்டி வருவது தெரிந்தது அவன் நெஞ்சில் குதுகுதுப்பு மெல்ல மெல்ல எழுந்தது. வரவரப் பெரிதாகிக்கொண்டே வந்த வண்டியைப்போல் குதுகுதுப்பும் பெரிதாகிக்கொண்டே வந்து, வண்டி நின்றதும் திடீரென்று மறைந்துபோனது. இண்டர்—இரண்டாம் வகுப்பு—முதல் வகுப்பு...எல்லாப் பெட்டிகளிலும் ஓடித் தேடினான். மாலதி வந்திருந்தால்தானே! சிவந்து நின்ற அவன்முகத்தில் வியர்வை முத்துக்கள் சிரித்து நிறைந்தன. நிராசை அவனைத் துரும்பாக நிறுத்தியது. வீசும் காற்றில் எங்கே தடுக்கி விழுந்துவிட நேரிடுமோ என்று அவனே தடுமாறிப்போனான். ஒரு நிமிஷத்தில் புரிந்தது உண்மை. அது மெயில் அல்ல—மூன்றுமணிக்கு முன்னே வந்திருக்கவேண்டிய வண்டி அப்போதுதான் காலந்தவறி வந்திருக்கிறது.

இந்த ஏமாற்றத்தால் தாக்கப்பட்ட அவன் உள்ளம் உண்மையிலேயே கால்மணிநேரம் கழித்து மெயில் வந்து நின்றபோதுகூட அச்சத்தைக் கக்கியது. இரண்டாம் வகுப்புக் கதவைத் திறந்துகொண்டு அவன் மாமனார் முதலில் இறங்கினார். மாலதி பின்னே இறங்கினாள். "வணக்கம் மாமா!" என்று சந்திரசேகரன் மகிழ்ச்சியால் கூவினான். அவன் பார்வையோ மாலதியின்மீதே தாவியிருந்தது. அவன் சிரித்தான். அவள் சிரித்தாள். அவர் சிரித்தார். மூவரும் வெவ்வேறு காரணங்களுக்காகச் சிரித்தனர்!

'வணக்கம் மாமா' என்று சொல்லும்போது எங்கே தவறி மாமா என்பதற்குப் பதிலாக 'மாலதி' என்று உச்சரித்துவிடுமோ நாக்கு, என்று பயந்துகொண்டிருந்தான். தப்பித்துக்கொண்டான். தவறவில்லை. அதை நினைத்ததும் அவன் சிரித்தான்!

'மாப்பிள்ளைக்குத்தான் நம்மிடம் எவ்வளவு மரியாதை! நாம் வருகிறோம் என்ற ஒரே காரணத்துக்காக ரயிலடிக்கே வந்துவிட்டாரே நம்மை வரவேற்க' என்று நினைத்ததும் பூரிப்பால் அவர் சிரித்தார்!

'இப்படி நினைத்துத்தான் அப்பா சிரிக்கிறார். அது எவ்வளவு தப்பு!' என்பதை நினைத்ததும் அவள் சிரித்தாள்!

Edited, Printed and Published by Murugu Subramanian for Ponni Ltd., at Ponni Achakam, 16. Seni Amman Koil Street, Tondiarpet, Madras - 21.



'காதல் கும்மாளி!'

— ஆதமசாந்தியில் ஸ்ரீதரன் நாயர், கோமளம்



'காட்டு ரோஜா'

தமிழ் இலக்கிய உலகிலே புதுமையை ஏற்றித்தர விருந்து இதழ்கள் திங்கள்தோறும் மலர்ந்து வருகின்றன. அறிஞர்களும் கலைஞர்களும் பலபடப் பாராட்டியுள்ளனர். அண்டை மொழி இலக்கியப் படைப்புக்களை நந்தம் தமிழ் மொழியிலே காணும் அரிய வாய்ப்பைத் தமிழர்களுக்கு — வழங்குகிறோம். —

பதிப்பாசிரியர்: பன்மொழிப்புலவர் *கா. அப்பாத்துரை* M.A.L.T.

இதுவரை ஏழு புத்தகங்கள்
வெளியாகி யிருக்கின்றன.

8

பிரேம்சந்த் வரைந்த இந்தி நாவல்

அறக் கோட்டம்

15—3—52 அன்று எங்கும் கிடைக்கும்

தனிப்பிரதி அணா 8

விவரங்கட்கு :

பொன்னி லிமிடெட்,

16, சேணியம்மன் கோவில் தெரு.
தண்டையார்ப்பேட்டை, சென்னை-21.